தமிழ் எண்ணும் எழுத்தும்

மணி. மாறன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 543

தமிழ் எண்ணும் எழுத்தும்

(ஐந்தாம் பதிப்பு)

ஆசிரியர்

மணி. மாறன்,

M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit.

தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
மற்றும்
ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

2018] [விலை ரூ.

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தமிழ் எண்ணும் எழுத்தும்
பதிப்பாசிரியர்	:	மணி. மாறன், தமிழ்ப்பண்டிதர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	*543*
ISBN	:	978-81-921829-8-8
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	ஐந்தாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	*2018*
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	*21 x 14* செ.மீ.
பக்கங்கள்	:	*132*
படிகள்	:	*500*
எழுத்து	:	*12* புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	சுவடியியல்
விலை	:	ரூ.

நூலாசிரியர் உரை

தமிழ் எண்ணும் எழுத்தும் என்ற இந்நூலினைப் படைக்கக் காரணம், நான் தமிழ்ப்பண்டிதராகப் பொறுப் பேற்ற முதல் இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ்ச் சுவடியியல் பயிற்சியின்போது, பயிலரங்கில் பங்கு கொண்டவர்களுக்கு தேவையான ஒரு பயிற்சி நூல் இல்லாத குறை உணரப்பட்டதேயாகும். அவர்களுக்குரிய பாடங்கள் தனித்தனித் தாள்களில் நகல் எடுத்து வழங்கப்பட்டு வந்தது. இதனைத் தவிர்த்து, பயிற்சி பெறும் மாணவர்கள் மட்டுமல்லாமல் சுவடியியல் பயில விரும்புபவர்கள், தமிழின் எழுத்துக்கள், எண்களின் வரலாற்றை அறிந்துகொள்ள விழையும் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததே இந்நூலாகும்.

காலந்தோறும் தமிழ் எண்கள், எழுத்துக்கள் பெற்ற மாற்றங்கள், சுவடியில் பயின்றுவரும் கூட்டெழுத்துக்கள், குறிப்பெழுத்துக்கள், எண்கள், சுவடியின் வரலாறு, சிற்பம், ஓவியம் போன்றவற்றினால் அறியலாகும் செய்திகள், சோழர்கால கல்வெட்டு எழுத்துக்கள், தமிழி மற்றும் வட்டெழுத்துக்கள், மிகப்பழமையான நூல்களில் உள்ள ஆண்டு, அவைகளைக் கணக்கிட உதவும் முறைகள், சுவடிகள், பதிவேடுகளின் பெயர்கள் போன்றவையும் கூறப்பட்டுள்ளன.

மேலும், முன்னர் வழக்கிலிருந்த அளவை முறைகள், பைசா, அணா போன்ற நாணயங்களின் விளக்கமும், கால அளவைகளும், சிற்ப அளவீடுகளும் மற்றும் காகித ஆவணங்கள் அவற்றில் காணப்படும் சொற்றொடர்கள்

பற்றியும், மேலும் பல்வேறு செய்திகளை அறிவதற்காக உரிய படங்கள், அட்டவணைகள், பட்டியல் போன்றவைகளையும் இந்நூலின்கண் தொகுத்து அளித்துள்ளேன்.

இந்நூலினை வெளியிட அனுமதி வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூலின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பதிப்பினை வெளியிட அனுமதி வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

தமிழ் எண்ணும் எழுத்தும் என்ற இந்நூலின் நான்காம் பதிப்பு மற்றும் தொடர்ந்து ஐந்தாம் பதிப்பாக வெளியிட அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி. இந்நூல் வெளிவர துணை நின்ற திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. **மா. இராமகிருட்டினன்,** M.A.,M.Phil.,M.Ed., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A.,B.Lit..M.L.I.S.Ph.D அவர்களுக்கும், அச்சகப்பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மணி. மாறன்,

தமிழ்ப் பண்டிதர்.

பொருளடக்கம்

வ.எண்.		பக்க எண்.
1.	எழுத்தின் தோற்றம்	1
2.	ஓலைகள்	9
3.	சிற்பங்களில் சுவடிகள்	15
4.	ஓவியங்களில் சுவடிகள்	22
5.	ஆவணங்களின் பெயர்கள்	26
6.	ஆண்டு கணக்கிடல்	52
7.	எண்கள்	67
8.	எழுத்துக்கள்	77
9.	கிரந்த எழுத்துக்கள்	84
10.	காகித ஆவணம்	88
11.	சரசுவதி மகால் நூலகம்	93
12.	உ. வே. சாமிநாதையர் பதிப்பித்தவை	103
13.	ஓலைச் சுவடிகள் இடம்பெற்றுள்ள நிறுவனங்கள்	107
14.	எழுத்துக்களின் பட்டியல்	109
15.	சுவடிகள் பயிற்சிக்காக......	113
16.	முகத்தல், நிறுத்தல், நீட்டல், அளவைகள்	117

"பிள்ளையார் சுழிபோட்டு செயல் எதையும் தொடங்கு" என்னும் பாடல் வரிகள் எச்செயலையும் தொடங்கும் முன்னர் பிள்ளையாரை வணங்கியே தொடங்கவேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் பிள்ளையாரையே ஓலை எழுத அழைத்ததாக பெருந்தொகை பொருளியலில் ஒரு வெண்பா உள்ளது.

ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுருவக் கங்காளன் செம்மல் - கரிமுகவன்
கண்ணால வோலை கடிதெழுத வாரானேற்
றண்ணாண்மை தீர்ப்பன் சபித்து.

அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்கு மணம் முடிக்க கண்ணால ஓலை (திருமண முகூர்த்த ஓலை) எழுத விநாயகரை அழைத்ததாக உள்ள பாடல்.

எழுத்தின் தோற்றம்

மொழிக்கு உறுப்பாக வரும் ஒலிக்கூறு எழுத்து ஆகும். எழுத்து எனும் தமிழ்ச்சொல் எழு என்னும் வினையுரிச் சொல்லை முதனிலையாகவும், உடைமைப் பொருள் தரும் து என்னும் இடைச்சொல்லை இறுதியாகவும் கொண்டு திகழ்கிறது. இது எழுப்புதல் என்னும் காரணப்பொருளை உடையதொரு பெயராக ஒலி வடிவை முதலாகக் குறித்து பின்னர் எழுது கருவிகளைக் கொண்டு தீட்டப்பெற்றது எல்லாம் எழுத்து எனப்பெற்றது.

வரிவடிவங்களின் தோற்றம்

மனிதன் தோன்றிய காலத்தில் தன்னுடைய செயல்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த சைகைகளைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் ஒலிகள் மூலம் குரல்களை வேறுபடுத்திக் காட்டிய அவன், தன் செயல்பாடுகளையும், கருத்துக்களையும் தனக்குப் பின்னால் வரும் சந்ததியினரும் அறிந்துகொள்ளும் வகையில், அனைவருக்கும் பொதுவான குறியீடுகளைப் பயன்படுத்தி கற்களிலும், பாறைகளிலும் பொறித்துவைத்தான். இதுவே மொழிக்கு எழுத்து வடிவம் ஏற்பட்டதின் தொடக்கமாகும்.

இன்றும் கூட சில பிரிவு மக்களிடையே பேசப்படுகின்ற மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. இவையெல்லாம் வெறும் பேச்சு வழக்கிலேயே வழங்கப்பெற்று வருகிறது. இதற்கு உதாரணமாக சௌராஷ்டிர மொழியைக் கூறலாம். இது வட்டார வழக்கியல் என்றழைக்கப்படுகிறது.

உலகில் தோன்றிய மொழிகளுள் மூத்த மொழி தமிழ்மொழி என்பது அறிஞர்களின் கூற்றாகும். தமிழ் எழுத்துக்கள் இன்று இருப்பது போலவே ஈராயிரம் ஆண்டுகட்கு முன், ஆயிரம் ஆண்டுகட்குமுன் இருந்ததா? எனில், இல்லை என்றே கூறலாம். காலத்தின் மாற்றங்களால், தமிழ் எழுத்துக்கள் பல்வேறு காலகட்டங்களில் பல நிலைகளில் மாற்றம் பெற்று இன்றுள்ள நிலையைப்பெற்றுத் திகழ்கின்றன.

பொருள்களின் வழி கருத்தை வெளிப்படுத்துதல்

ஆதியில் மனிதன் நாம் இன்று எழுதுவது போல், எழுதுவதற்குக் கற்றுக்கொண்டவன் அல்ல. அன்றைய மக்கள் தாம் கருதுகின்ற பொருளைக் குறிக்க அப் பொருள்களை அதனதன் வடிவிலேயே கொடுத்த நிலையும் உண்டு. உதாரணமாக பாரசீகத்து மன்னன் டரையஸ் என்பவனுக்கு சித்தியர்கள் ஒரு தூது அனுப்பியதாக ஹீராடோட்டஸ் என்னும் கிரேக்க ஆசிரியர் குறிப்பிடுகிறார். பகைவர் அஞ்சியோடி பதுங்காவிட்டால் இறந்து விடுவர் என்பதே அத்தூதின் செய்தியாகும். இச்செய்தியானது எழுத்தில் எழுதப்பட்டது அல்ல. தவளை, எலி, அம்புகள் ஆகியவை ஒரு தூதுவனிடம் கொடுத்து அனுப்பப்பட்டன. பகைவரெல்லாம் தவளைகள் தண்ணீரில் ஒளிந்தது போலவும், எலிகள் வளைக்குள் நுழைவது போலவும் மறையாவிட்டால் அம்புகளால் கொல்லப்படுவர் என்பதே இதன் மூலம் அறியப்படும் கருத்தாகும். எனவே எழுத்து வழியே கருத்தினை வெளிப்படுத்த மக்கள் கற்றுக்கொள்ளும் முன்பு அவ்வப்பொருள்களின் வடிவங்களையே அறிகுறியாக வைத்தனர்.

ஓவியத்தின் மூலம் எண்ணங்களை வெளிப்படுத்துதல்

எகிப்து தேசத்தில் காணப்படும் ஓர் ஓவியத்தில் முட்டை வடிவமான ஓர் அடி நிலத்தில் சில செடிகள்

காணப்படுகின்றன. அந்த அடி நிலத்திலிருந்து கிளம்புவது போல் ஒரு மனிதன் தலை இருக்கிறது. அவனுடைய தலையை ஒரு கயிற்றினால் பருந்து ஒன்று பற்றிக் கொண்டிருக்கிறது. இத்திரண்ட ஓவியம் பாப்பைரஸ் எனும் கோரைப்புல்லுக்கு பெயர்போன நைல் ஆற்றுப்பிரதேசத்தில் வாழ்ந்த புராதன மக்களை எவனோ ஒருவன் வென்று அரசனானான் என்னும் கதையைக் கூறுகிறது. இவ்விதம் படத்தில் உள்ள வடிவங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நிகழ்வைக் குறிக்கும். இது பாங்குஸ்கேன்டிநேவியா மக்களிடத்திலும், அமெரிக்க ஆதிகுடிகளிடத்திலும் உண்டு.

பொருளை உணர்த்த அதனதன் வடிவங்களில் வரைதல்

எழுத்து வளர்ச்சியின் அடுத்த நிலையில் ஒவ்வொரு உருவமும் தனித்தனிப் பொருள்களை நேரிடையாகக் குறிக்க முற்பட்டது. எடுத்துக்காட்டாக எகிப்து தேசத்தில் அமைத்த ஒருவகை எழுத்தில் கண்ணின் உருவம் கண்ணையும், வட்ட வடிவம் ஞாயிற்றையும், பிறை வடிவம் திங்களையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டன. இவ்வடிவங்களைக் கண்டவுடன் பொருள் இன்னது என்று அறிந்துகொள்ள முடியும்.

ஆனால் ஒவ்வொரு படமும் ஒவ்வொரு பொருளின் நிலையை அல்லது செயலைக் காட்டக் கூடுமேயல்லாமல் எண்ணினையோ, வேற்றுமையையோ, காலத்தையோ காட்டாது. எனவே பல்வேறு வகையான கருத்துக்களை தெரிவித்தல் இவ்வகை எழுத்துக்களால் இயலாது. மேலும் அன்பு, அறிவு. நட்பு, பகை போன்ற உணர்வுகளை உணர்த்தக் கூடிய படம் இல்லாததால் நாளடைவில் பிற பொருள்களை உணர்த்தும் படங்களே இவற்றிற்கும் பயன்பட்டன. எடுத்துக்காட்டாக மாடுகளின் வடிவம் செல்வத்தை உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது. கைகோர்த்திருத்தல் நட்பைக் காட்டுவதாக கொள்ளப் பட்டது. சில வகையான

கருத்துக்களை இடம், பொழுது போன்றவற்றின் அடிப் படையில் உணரவேண்டும்.

ஒலி எழுத்து நிலை

அடுத்தபடியாக ஒவ்வொரு படமும், ஒவ்வொரு கருத்தினைக் குறித்து நிற்காமல் அந்தந்த வடிவத்திற்கேற்ப ஒலியைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. இந்நிலையை ஒலி எழுத்து நிலை எனலாம்.

முற்காலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு, ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளைக் குறிக்கப் பயன் படுத்தினர். நாளடைவில், அவ்வடிவானது பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத் தலைப்பட்டது. அவ்வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல் முதல் அசை ஒலியை மட்டுமே குறிப்பிடுவதாகிப் பின்னர் முதல் எழுத்தளவிலேயே நின்றுவிட்டது. இக்காலத்தில் உள்ள எழுத்துக்களெல்லாம் இம்முறைப்படி ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபு வேறுபாடுகளாகக் கருதப்படுகின்றன.

மொழிகளின் அமைப்பு

இன்றைக்கு வழக்கிலிருக்கும் பல ஆயிரக்கணக்கான மொழிகளுள் இலக்கண நெறியில் செம்மையுற்று வழங்குவனவற்றிலுள்ள வரிவடிவங்களை நோக்கினால் இந்தியாவின் வடபகுதிகளில் உள்ள மொழிகளின் எழுத்துக்கள் ஏறத்தாழ ஒற்றுமையுள்ள ஒருவகை அமைப்பினைக் கொண்டுள்ளது. தென்பகுதி மொழிகளின் எழுத்துக்கள் ஒருவகை அமைப்பினையும், ஐரோப்பிய மொழிகளின் எழுத்துக்கள் ஒருவகை அமைப்பினையும், மேற்கு, மத்திய கிழக்கு ஆசிய மொழிகள், ஆப்பிரிக்கக்

கண்டத்தில் வழங்கும் மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை அமைப்பினையும் கொண்டு திகழ்வதைக் காணலாம்.

சித்திரக் குறியீடுகளைக் கொண்டு வளர்ந்த ஒவ்வொரு மொழிக்குடும்பத்திலும் பல்வேறு கால கட்டங்களில் சிற்சில தனித்தன்மைகளோடு அந்தந்த மொழி அறிஞர்களால் எழுத்தின் வரிவடிவங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இன்றைக்கு சீனமொழிக்குடும்பங்களின் எழுத்துக்கள் மட்டுமே பண்டைய சித்திர எழுத்துக்களோடு தொடர்புடையவனாகக் கருதப்படுகின்றன. பேச்சு மொழியாக மட்டும் வழங்கி வந்த சில மொழிகள் இன்றைக்கு ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவங்களை மிகச்சிறிய வேறுபாடுகளோடு பெற்று விளங்குகின்றன. இன்று சுருக்கெழுத்திற்கு அறிஞர்கள் அமைத்துக் கொண்டுள்ள குறியீடுகளைப் போலவே அவ்வக்காலங்களில் எழுதும் கருவிக்கும், எழுதப்படும் கருவிகளுக்கும் ஏற்ப வரிவடிவங்கள் அறிஞர்களால் காலந்தோறும் திருத்தம் பெற்று அமைத்துக்கொள்ளப்பட்டன.

தமிழ் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்கள் அச்சிடப்பட்ட காலத்தேதான் இப்பொழுதுள்ள நிலையான வரிவடிவங்களைப்பெற ஆரம்பித்தன. சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ் எழுத்துக்கள் இப்பொழுதுள்ள வரிவடிவ அமைப்பைப் பெற்றன எனக் கூறலாம். அதற்குமுன் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் சில மாறுதலுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றன.

கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் காலந்தோறும் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவம்

உயிரெழுத்துக்கள்



மெய்யெழுத்துக்கள்



கி. மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வரி வடிவில் குறிப்பிடத்தக்க பெரும் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கி. பி. 3ஆம் நூற்றாண்டை ஒட்டி குறிப்பிடத்தக்க மாற்றம் பெறத் தொடங்கியதைக் காண்கிறோம். ஆனால் மெய், உயிர்மெய் எழுத்துக்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் உயிரெழுத்தில் ஏற்படவில்லை. கி.பி. 5ஆம் நூற்றாண்டை ஒட்டியே உயிரெழுத்தில் மாற்றம் ஏற்படலாயிற்று எனத் தெரிகிறது. அதன்பின் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்கள் யாவும் படிப்படியாய் வளர்ச்சிபெறத் தொடங்கியிருப்பது நன்கு புலப்படுகிறது.

கல்வெட்டு, செப்பேடுகளில்

இன்றைய அச்செழுத்துக்களை வடிவமைக்கப் பெரிதும் துணையாக அமைந்தவை ஓலைச்சுவடிகளில் முன்னோர் எழுதிப் பயின்ற வடிவங்களேயாகும். ஓலைச்சுவடிகள் அழியும் தன்மையுடையனவாதலின் காலந்தோறும் அவை படியெடுத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தன. அவ்வாறு பெயர்த்து எழுதுந்தோறும் அவ்வக்கால சூழலுக்கேற்ப அவை சிறுசிறு மாற்றம் பெற்று செம்மை பெறுதல் இயல்பே. இன்று கி. பி. 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஓலைச்சுவடிகளைக் காண்பது அரிது. எனவே, பழந்தமிழ் வரிவடிவங்களைக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் உள்ள வடிவங் களைக் கொண்டு அறிய முடிகிறது.

கல்வெட்டு செப்பேடுகளில் காணப்படும் எழுத்துக் களுக்கும், ஓலைச்சுவடிகளில் காணப்படும் எழுத்துக் களுக்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடு எழுதும் கருவியாலும், எழுதும் முறையாலும் ஆனதேயாகும். கல்லிலும், செம்பிலும் எழுத்துக்களை தனித்தனியாக வரைந்து செதுக்கி அமைப்பது முறையாகும். ஓலையில் கூரிய முள் அல்லது ஆணியைக் கொண்டு எழுதுவர். அதனால் ஒன்றோடொன்று சங்கிலித் தொடர்போல் அமையுமேயன்றி தனித்தனியாக அமைதல் அரிதாகும். ஓரெழுத்தே கல்லில் வெட்டும்போது ஒரு வடிவாகவும், கையால் எழுதும்போது ஒரு வடிவாகவும் அமைதல் இயல்பேயாகும்.

தமிழ் மக்கள் இடமிருந்து வலமாக விரைந்து எழுதும் பழக்கம் உடையவர்கள். அதனால் எழுத்துக்கள் வளைந்து, உருண்டு செல்லும் அமைப்புடையனவாக இருந்தன. கல்லிலும், செம்பிலும் வெட்டும்போது சதுரம், கோணம், வட்டம் ஆகிய நிலைகள் செம்மையாக அமையும். ஓலைச்சுவடியில் எழுதும் முறையும், கல்வெட்டில் எழுதும்

முறையும் வேறு வேறு அல்லனவாயினும் ஆய்வாளர்கள் கையெழுத்து முறையில் அமைந்தவற்றை கோளெழுத்து, வட்டெழுத்து, என்றும், கல்லிலும், செம்பிலும் செதுக்கி அமைந்தவற்றை தமிழி எழுத்து என்றும் கூறுவர்.

தமிழ்மொழியில் கல்வெட்டுச் சாசனங்கள் பல்லவர் களின் ஆட்சிக்காலம் முதல் கிடைக்கின்றன. பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம் ஆகியவற்றில் கி. பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டுவரையிலான காலத்தில் காணப்படும் எழுத்துக்கள் பழைய வட்டெழுத்துக்களைச் சார்ந்துள்ளன என்பர்.

இராசராசசோழன் கொண்டுவந்த ஒரே முறை

பாண்டி மண்டலத்தை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்திய முதலாம் இராசராசசோழன் அதற்கு முன் அந்நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்துக்களை நீக்கி விட்டு தொண்டை மண்டலத்திலும், சோழ மண்டலத்திலும் வழங்கிய தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்துமாறு செய்தான். இச்செய்தியினை திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள திருக்குற்றாலத்தில் காணப்படும் இரு கல்வெட்டுக் களால் அறியமுடிகிறது.

ஓலைகள்

ஓலைகள் பட்டோலை, பொன்னோலை, மந்திர ஓலை, வெள்ளோலை, வாயோலை என்று இலக்கியங் களிலும், அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, கீழ் ஓலை, தூது ஓலை, ஓலை பிடிபாடு என்று கல்வெட்டுக்களிலும் பல வகைகளாகச் சொல்லப் பட்டுள்ளன.

தமிழகத்தில் கல்லில் எழுதப்பட்ட எழுத்துக்கள் கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. அவற்றில் கி. பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் அறச்சலூர் கல்வெட்டில்தான் முதல் முதலாக எழுத்து என்ற சொல் காணப்படுகிறது. கி. பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில்தான் முதன் முதலாக ஓலை என்ற சொல் காணப்படுகின்றது. ஆனால் இவற்றிற்கு முன் சங்க இலக்கியம், சங்கம் மருவிய கால இலக்கியங்களில் ஓலை, எழுத்து பற்றி செய்திகள் அறியக்கிடைக்கின்றன.

பூவார் அடிச்சுவடி என்தலைமேல் பொறித்தலுமே (241)

என்று திருவாசகம் குறிப்பிடுகின்றது. மேலும் இலக்கிய இலக்கணங்களில் சுவடி என்னும் சொல் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை எனக் குறிக்கப்பட்டு இருக்கின்றது.

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
... .
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர் (மரபியல்,86)

என்பது தொல்காப்பியர் நூற்பா, பனை, தென்னை, பாக்கு முதலிய மரங்களின் இலையாகிய உறுப்பினைக் குறிக்கும் மரபுச் சொற்களாகத் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

தோடு

அணித்தோட்டு திருமுகத்து ஆயிழை எழுதிய
மணித்தோட்டு திருமுகம் மறுத்ததற் கிரங்கி (8-111-112)

எனச் சிலப்பதிகாரம் தோடு பற்றிக் குறிப்பிடுகின்றது. அதில் திருமுகம் என்னும் சொல்லும் ஓலையில் எழுதிய கடிதத்தைக் குறிக்கின்றது என்பதும் தெரியவருகின்றது.

மடல்

கண்மணி அனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கல் மாதவி யீத்ததும் (13:76-77)

என்று சிலப்பதிகாரம் மடல் பற்றிக் கூறுகின்றது.

ஓலை

மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூலவோலை
மாட்சியில் காட்ட வைத்தேன் (56,24,59)

எனத்தடுத்தாட்கொண்ட புராணம் கூறுகிறது.

ஏடு

பள்ளித் தடுக்கும் கையேடும் படிக்கவும் சுவடியும்
(பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை)

செய்ய சிவஞானத் திரளேட்டில் ஓர் ஏடு
(தமிழ்விடு தூது-3)

என்ற இவ்வடிகளில் ஏடு என்ற சொல்லாட்சி பயன்படுத்தப் பட்டுள்ளது.

நூல்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள்: 783)

நூல் என்னும் சொல் பழங்காலத்தில் இலக்கணத்தை மட்டுமே குறித்து வந்தது. தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் சொற்களாலும் இலக்கண நூலைக் கூறியிருக்கின்றனர். இலக்கணம் அல்லாத பிற நூல்களைச் செய்யுள் என்றும், பாட்டு என்றும் குறித்து வந்திருக்கின்றனர்.

புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
(தொல். பாயிரம்)

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே (நன்.நூ.54)

இவற்றுள் பனுவல் என்னும் சொல் நூலைக் குறிக்கின்றது.

நூலே, கரகம், முக்கோல், மணையே
ஆயும் காலை அந்தணர்க்கு உரிய
(தொல்.பொரு.மர.71)

பாட்டு, உரை, நூலே, வாய்மொழி பிசியே
(தொல்.பொருள்.செய்.75)

துணி

தூது அனுப்பப்படும் செய்திகளைத் துணிகளில் எழுதி அனுப்பியுள்ளதாக இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

கையிற் புனையும் கழிநுண் ணானர்
ஏட்டிலும் கிடையினும் மூட்டலை கிழியினும்
(பெருங்கதை)

என்ற அடிகள் இலையும் துணியும் எழுதப் பயன் பட்டமையைத் தெரிவிக்கின்றன.

முதிர்பூந் தாழை முடங்கல் வெண்தோட்டு
விரைமலர் வாளியின் ....
திருமுகம் போக்கும் செவ்விய ளாகி (8:47-49)

எனும் சிலப்பதிகாரக் கூற்று, தாழைமடல் எழுதப்படு பொருளாகப் பயன்பட்டதைச்சுட்டுகிறது.

ஓலை, கடைகளில் விற்கப்பட்டதை சங்கப் புலவர்களான ஓலைக்கடையத்தார் மகன் வெண்ணாகன், மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் ஆகியோரின் பெயர்கொண்டு அறியமுடிகிறது.

தமிழகத்தில் கிடைக்கும் ஓலைச் சுவடிகள், இலக்கியம், மருத்துவம், மாந்திரியம், சோதிடம், சமயம், வணிகம், ஆவணங்கள், பள்ளி மாணவர்களுக்கான அரிச்சுவடி, எண்சுவடி என்ற வகைகளில் அடங்கிவிடக் கூடியவை. பொதுவாக எல்லாச் சுவடிகளும் ஒரே மாதிரியாக இருந்தாலும், ஒவ்வொரு வகை ஓலைச்சுவடியிலும் ஒவ்வொரு வகையில் எழுதும் முறை தனித்துவம் பெற்றிருக்கும். இலக்கியச்சுவடிகளில் பாடல்களின் முடிவில் எண்களைக் காணலாம். இடதுபுற ஓரங்களில் அத்தியாயத் தலைப்புப் பெயர்களைக் காணலாம். மாந்த்ரீகச் சுவடிகளில் பலவகைச் சக்கரங் களின் (இயந்திரம்) படங்களைக் காணலாம். சோதிடச் சுவடிகளில் ராசிச் சக்கரங்களைக் காணலாம், குறியீடு களையும் காணலாம். பள்ளிச்சுவடிகளில் பக்கவாட்டில் மூன்று நான்கு பத்திகள் பிரித்து எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

ஓலைகளில் எழுதப்பட்டுள்ள செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும். பொதுவாக ஒரு கட்டில் உள்ள சுவடிகள் ஒருவரால் எழுதப்பட்டிருந்தால் முதலிரு ஏடுகளைச் சிரமப்பட்டு படித்தால் அவர் எழுதுகின்ற முறை நமக்குப் புரிந்து போகும். அதனை மனதில் கொண்டால் அடுத்த ஏடுகள் அவரது கையெழுத்து பழக்கப்பட்டதால் படிக்க எளிதாகிவிடும்.

ஓலைகளில் நார்த்தன்மை குறுக்கு வாட்டாக இருப்பதனால் ஆணியால் கிழித்து எழுதும்போதும், புள்ளியிடும்போதும், ஆணியை அடிக்கடி எடுத்து வைத்து எழுதும்போதும் இடர்பாடுகள் அதிகம் இருக்கும். எனவே ஓலை எழுத்துக்கள் புள்ளிகள் இல்லாமலும் மயங்கி மாறுபட்டும், கூட்டெழுத்துக்களாகவும் அமைந்தன. கணிதம், ஆவணம் மற்றும் வணிகச் சுவடிகளில் ஆண்டு, மாதம், தேதி, நிலம், பணம், ரூபாய், சாதிப்பெயர்கள் போன்றவை திரும்பத் திரும்ப வரும்போது அவை சுருக்கி எழுதப்பட்டு, பழக்கமான

குறியீடுகளாக மாறின. அது மட்டும் அல்லாமல் தமிழுக்கென்றே தனி எண்கள் இருந்தமையும், பின்ன எண்கள் (கீழ் இலக்கம், கீழ்வாய் இலக்கம்) இருந்தமையும் அவை இன்று வழக்கில் இல்லாமல் போனதையும் சுவடிகளில் அவற்றைத் தெரிந்து பழகிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன.

அழியும் நிலையில் உள்ள ஏடுகள் புதிதாகப் படியெடுக்கப்பட்டன. ஒருவரிடம் உள்ள நூல் மற்றவருக்கு தேவைப்படும் போதும் படியெடுக்கப்பட்டது. அப்படி படியெடுப்பது ஏடு திருப்புதல், பிரிநகல், சபாது என்று அழைக்கப்பட்டது.

ஏடு எழுதும்போது ஏற்படும் தவறுகள் ஏட்டுக்குத்தம், எழுத்துக்குற்றம், சொற்குற்றம், வாசகப்பிழை, வரி மாறாட்டம் எனப்பட்டன. எலிகடி, வெட்டுச் செதுக்கு, செல் அரிப்பு முதலியவையும் குற்றங்களே.

சுவடி எழுதத் தேவையான ஓலைகள் பனை மரத்திலிருந்து பெறப்பட்டது. இத்தகு பனை மரங்களின் பெயர் பற்றி நிகண்டு நூல்கள் சுட்டுவதைக் காண்போம்.

சேந்தன் திவாகரத்தில் - பெண்ணை, தாலம், புற்றாளி, போந்தை, பனை என்றும்,

பிங்கல நிகண்டில் – தாலம், பெண்ணை, புற்பதி, தாளி, புல், பனை என்றும்,

சூடாமணி நிகண்டில் – தாலம், பெண்ணை, போந்து, நீலம், கருந்தாள், புற்றாளி, பனை என்றும் .

கயாதர நிகண்டில் – தாலம், பெண்ணை, போந்து, நீலம், கருந்தாள், புற்றாளி, பனை என்றும் வழங்கப்படுகின்றன.

பனை மரம்

சிற்பங்களில் சுவடிகள்



வெண்ணெய் நல்லூர் சபை முன்பு ஈசனார் கிழவேதியராக ஆவண ஓலை காட்டி நிற்கின்றார். அதனைக் கையில் வாங்கிய சுந்தரர் திகைப்புற்று நிற்க, சபையோர் இருவர் ஆவணக்களரியின் சுவடிக்கட்டுகளைப் பிடித்தவண்ணம் அமர்ந்துள்ளனர். தாராசுரம் கோயிலில் உள்ள இச்சிற்பத்தொகுதிக்கு மேலாக ஆவண ஓலை காட்டியபடி என்ற எழுத்துப்பொறிப்பு உள்ளது.

சுவடி ஏந்திப் பாடும் ஐயடிகள் காடவர்கோன்



தொண்டை நாட்டில், காஞ்சிபுரத்தில், பல்லவர் மரபில் தோன்றிய அரசர் வடநூல், தென்தமிழ் முதலாம் கலைகள் பல வல்லவர். நிலையில்லாத அரசாட்சியை வெறுத்து மகனுக்கு முடிசூட்டி, சேத்திர யாத்திரையினையை மேற்கொண்டவர். இவர் பாடிய சேத்திர திருவெண்பா என்பது பதினொன்றாம் திருமுறையில் வைத்துப் போற்றப்பெற்றுள்ளது.

பொய்யடிமையில்லாத புலவர்



மதுரையில் தமிழ்ச்சங்க புலவர் வேண்டுகோளுக்கு இரங்கி திருவாலவாய் இறைவர் சங்கப்பலகையினைத் தந்தருளியதாக, பெரும்பற்றப்புலியூர் நம்பியும், பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணத்தில் குறிப்பர். இவர்கள் காலத்திற்கு முன்னரே இரண்டாம் இராசராச சோழன் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்திற்கு சிற்ப வடிவம் அளித்துள்ளான். பரணர், கபிலர், நக்கீரர் முதலிய 49 சங்கப் புலவர்களையே பொய்யடிமையில்லாத புலவர் என நம்பியாண்டார் நம்பி குறிப்பிடுகின்றார்.

நீரில் ஏடு விடுதல்



சமணர்களுக்கும், சைவர்களுக்கும் நடைபெற்ற அனல்வாதம், புனல்வாதம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் சம்மந்தர் ஓலைச்சுவடிகளை வையை ஆற்றில் விட அச்சுவடிகள் நீரில் அடித்துக்கொண்டு போகாமல் எதிர்த்து வந்ததாகவும், சமணர் நீரில் விட்ட சுவடிகள் ஆற்றில் அடித்துக்கொண்டு போனதாகவும் புராண வரலாறு கூறுகின்றது.

சுவடி ஏந்திய சிவபெருமான்



கல்லாலின் கீழமர்ந்த தெட்சிணாமூர்த்தி. ஒரு கையில் உருத்திராக்க மாலை, மற்றொரு கையில் ஓலை அடுத்த கையில் சூலம் வேறு கையில் தாமரை மொக்கு. தஞ்சை, செந்தலை,கண்டியூர், வீரசிங்கம்பேட்டை, திருநெய்த்தானம் போன்ற ஊர்களிலும், வடஇந்தியாவில் தேவ்கர் எனும் இடத்திலும், இதுபோன்ற சிற்பம் உள்ளது.

இராஜலேக்ககர் சிற்பம் (எழுத்தச்சர்)-நாகார்ஜூனகொண்டா

கையில் சுவடி ஏந்திய சோழர்கால மணிவாசகர் செப்புப் படிமம்
மதுக்கூர், தஞ்சை மாவட்டம்.

மணிவாசகர் கையில் உள்ள ஓலையில் திருக்கோவையாரின் முதலடியான திருவளர் தாமரை என்ற எழுத்துப் பொறிப்புக் காணப்படுகின்றது.

திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி
னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே.



சுந்தரர் ஆவண ஓலைக் காட்சி - தஞ்சைப் பெரியகோயில் கருவறையின்மேல் அமைந்துள்ள சுற்று அறையில் காணப்படும் சோழர்கால ஓவியம்

சேதுபதி மன்னர் முன் சுவடி ஏந்தியப் புலவர்

முத்துவிஜயரகுநாத சேதுபதி அமர்ந்திருக்க அவர்முன் புலவர் ஒருவர் இராமாயணச் சுவடியைப் படித்துக்காட்டிய வண்ணம் இராம காதையைக் கூறுவதாகத் தொடங்குகிறது இராமலிங்கவிலாசத்து ஓவியங்கள். அதில் காட்டப்பட்டுள்ள சுவடியின்மேல் இராமாயணம் என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

திருமறைக்காட்டுத் திருக்கோயில் ஓவியத்தில் கையில் ஓலையுடன் யானைமீது அமர்ந்து செல்லும் சேக்கிழார்

திருவாரூர்க்கோயில் தேவாசிரிய மண்டபத்து விதான ஓவியத்தில் உள்ள எழுத்துக்கள் சுவடியில் பயின்று வரும் எழுத்துக்களைப் போலவே உள்ளது.

பனை ஓலைச் சுவடிகளில் ஓவியம்



கிடந்த கோல திருமாலின் வரைகோட்டு ஓவியம்
திருவாய்மொழி வாசகமாலை

பனை ஓலைச் சுவடியில் ஓவியம்



காகிதச்சுவடியில் வண்ண ஓவியம்

இராமாயணக் காட்சிகள் - காகிதச் சுவடியில் வண்ண ஓவியம்



எண்ணும்-4

முத்திரையுடன் கூடிய ஓலைச்சுவடி



அச்சிடப்பட்டு வெளிவந்த நூல்கள் சுமார் இருநூறு ஆண்டுகளிலிருந்துதான் காணக்கிடைக்கின்றன. அதற்குமுன்னர் ஓலையில் எழுதப்பட்ட நூல்கள்தான் இருந்தன. 200 ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் காகிதத்தில் எழுதும் முறை நடைமுறைக்கு வந்தது. அதுவரை இப்போது காகிதத்தில் எழுதப்படுபவை அனைத்தும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு வந்தன. அப்போதைய ஓலைச்சுவடிகள் மூன்று வகைப்படும். அவை 1. ஆவணங்கள், 2. பதிவேடுகள், 3. நூல்கள் என்பனவாகும்.

1. நிலங்கள் மற்றும் வீடுகள் போன்ற சொத்துக்களின் உரிமைப்பட்டயங்கள், கிரயம், தானம், கடன் ஒத்தி போன்ற சாசனங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள், சான்றுகள், தேர்தல் வாக்குச்சீட்டுக்கள், அரசு ஆவணங்கள், அறிவிப்புகள் போன்றவை எழுதப்பட்ட ஓலைகள், ஆவணங்கள் எனப்படும்.

2. பதிவேடுகள் வரவு-செலவு கணக்குகள், அன்றாட நிகழ்ச்சிக் குறிப்புகள், நிலங்கள் உரிமைப் பதிவுகள், வரி

நிர்ணயம், வரி வசூல் விவரம், ஊழியர்கள் மற்றும் அவர்களின் ஊதியம் ஆகிய விவரங்கள், நன்கொடைகள் வழங்கும் விவரங்கள் போன்றவை எழுதப்பட்ட ஓலைகள் பதிவேடுகள் எனப்படும்.

3. இலக்கியங்கள், இலக்கணங்கள், கணிதம், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற நூல்கள் ஓலைகளில் எழுதப் பட்டிருந்தன.

இவற்றில் மூன்றாம் வகையான நூல்கள் இப்போது பலரிடமும் உள்ளன. ஆனால் ஆவணங்களும், பதிவேடுகளும் இப்போது அதிகமாக இல்லை. இவை அரிதாக அரசு அலுவலகங்களிலும் தனியார் வணிக நிறுவனங்களிலும் இருந்தன. இவை அலுவலக நடைமுறைப்படி காலாவதியானதும் அழிக்கப்பட வேண்டியவை. ஆகவே அவை அவ்வப்போது அழிக்கப்பட்டு விட்டதால் அதிகளவில் ஆவணங்களும், பதிவேடுகளும் கிடைக்காமற் போய்விட்டன. இதுபோலவே வணிகர்களிடம் இருந்தவைகளும் காலப்போக்கில் அழிந்து விட்டன.

தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் ஆவணங்களும், பதிவேடுகளும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பராமரிக்கப்பட்டு வந்தன. அந்த ஆவணங்கள் ஆவணக் களரியில் பதிவு செய்யப்பட்டன. தவிர இக்காலத்தில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கிரயத் தொகை முதலானவை பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களைப் பதிவு செய்யும்போது பதிவாளர் முன்பாக செலுத்துவது நடைமுறையில் உள்ளது. அதுபோலவே அக்காலத்திலும் இவ்வழக்கம் நடை முறையிலிருந்துள்ளது. இதனை "இக்காசு நாற்பத்தைந்தாயிரம் ஆவணக் களரியிலேயே காட்டேற்றில் கைச் செலவுறக்கொண்டு விற்று விலைப் பிரமாணம் செய்து குடுத்த இந்நிலத்திற்கு இதுவே விலையாவதாகவும்" என்று காட்டுமன்னார்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது.

மூல ஆவணங்கள் ஓலையில் எழுதப்பட்டு அதற்குச் சரியான படிகள் கல்லில் கல்வெட்டுக்களாகவும், செப்புத் தகட்டில் செப்பேடுகளாகவும் பொறிக்கப்படும். இதனை "இவ்வோலை பிடிபாடாகக்கொண்ட சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டின இடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க" என வரும் கல்வெட்டுத் தொடர்களால் அறியலாம். ஓலைகளில் எழுதப்பட்ட ஆவணங்கள் காலப்போக்கில் அழிந்து போனாலும் அவற்றின் படிகளான கல்வெட்டுக்கள் செப்பேடுகள் ஆகியவை இன்றளவும் இருந்து அதில் உள்ள செய்திகளை நமக்கு அறிவிக்கின்றன.

நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்கில் வழக்காளிகள் தமது வாதத்திற்கு உலக வழக்கு, ஓலையில் எழுதப்பட்ட ஆவணங்கள், நேரில் கண்டவர்களின் சாட்சியம் ஆகியவற்றை ஆதாரமாகக் காட்டுவர். இந்த ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு பரிசீலித்து இவ்வாதாரங்களின் அடிப்படையில் நீதி வழங்கும். இந்த நடைமுறை அக்காலத்திலிருந்தே இன்றுவரை நடைபெற்று வருகிறது. ஓலையில் எழுதப்பட்ட ஆவணம் மிக முக்கிய சாட்சி ஆதாரமாக விளங்குவதை சேக்கிழார்பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில்,

ஆட்சியில் ஆவ ணத்தில்
அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை
படி ஓலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான்

என்றும்,

இருள்மறை மிடற்றோன் கையில்
ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும்
ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி
விரிந்ததன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ட
வாசகம் செப்பு கின்றான்.

என்றும் கூறுகிறார்.

ஓலைச்சுவடிகளை எழுத சாதாரணப் பனையோலைகள், தாளிப்பனை எனப்படும் பனை மரத்தின் ஓலைகள் ஆகிய இருவகையான பனை ஓலைகள் பயன் படுத்தப்படுகின்றன. சாதாரணப் பனையைவிடத் தாளிப் பனையின் ஓலைகள் அகலமாகவும், நீளமாகவும், மென்மையாகவும் இருக்கும்.

நூல்கள் எழுதத் தகுதியான காய்ந்த ஓலைகளை அளவாக நறுக்கிப் பதமாக நீராவியில் வேகவைக்க வேண்டும். அவற்றை ஈரமின்றி உலர வைத்து மழுங்கிய கூழாங்கல் அல்லது சங்கு கொண்டு அழுத்தித் தேய்த்துப் பதப்படுத்துதல், ஓலை வாருதல் அல்லது ஏடு வாருதல் எனப்படும்.

பதப்படுத்திய ஓலைகளைக் கயிறு கோர்த்துச் சுவடியாக்க ஓலையில் இடது பக்கமோ அல்லது இரு பக்கங்களிலுமோ துளையிடுவார்கள். இவ்வாறு இடப்படும் துளைகள் "ஓலைக்கண்கள்" எனப்படும்.

ஆவணங்கள் எழுத நரம்பு நீக்கப்படாத முழு ஓலைகளை அளவாக நறுக்கிக்கொண்டு முன் கூறியபடியே ஆவியில் வேகவைத்துப் பதப்படுத்த வேண்டும். இவை "ஆவண ஏடுகள் அல்லது சாசன ஏடுகள்" எனப்படும்.

பதிவேடுகள் எழுத நரம்பு நீக்கப்பட்ட முழு ஓலைகளை நீளமாகப் பயன்படுத்துவார்கள். இந்த ஓலைகள் ஆவியில் வேகவைத்துப் பதப்படுத்துவதில்லை. பதப் படுத்தாத ஓலைகளையே பயன்படுத்தி வந்தனர். இந்த முழு ஓலைகள்"கணக்கு ஏடு" எனப்படும்.

ஓலையில் எழுதப்பட்ட பதிவேடுகள் நூல்களைப் போல் அடுக்காகக் கோர்த்து கட்டப்படுவதில்லை. அவை கயிற்றில் கோர்த்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருக்கும். அவை அடிப்பாகமும், நுனிப்பாகமும் சிறுத்து நடுப்பாகம் பெருத்து மலைப்பாம்பின் வயிற்றுப் பகுதி போல் காணப்படும். இவ்வாறு சுருட்டிக் கட்டப்பட்ட கணக்குகள் "சுருணை" எனப்படும்.

நூல்கள் எழுதுவதற்குத் தேவையான ஓலைகளைப் பதப்படுத்தித் துளைகள் போட்டு கயிறு கோர்த்துச் சுவடி யாக்கப்படும். இந்தச்சட்டங்கள் "கம்பை" அல்லது "காப்புச்சட்டங்கள்" எனப்படும்.

இவ்வாறு எழுதுவதற்குத் தகுதியாக செம்மை செய்யப்பட்ட எழுதாத ஓலைகள் "வெள்ளோலைகள்" எனப்படும்.

மிகப்பெரிய சுவடியாக இருந்தால் ஓலைகளின் இருபக்கமும் துளைகள் போடப்பட்டு இடது பக்கத் துளையில் கயிறு கோர்த்து வலது பக்க துளையில் ஏடுகள் பிறழாமலிருக்கக் குச்சியோ அல்லது இரும்புக் கம்பியோ செருகுவார்கள். இது"நாராசம்" எனப்படும்.

ஆவணங்கள் எழுதும் ஓலைகள் பதப்படுத்தப்பட்டு அரசு முத்திரை பதிப்பிக்கப்படும். இவ்வாறு பதிப்பிக்கப் படுபவை "ஓலை முத்திரை" அல்லது "ஏட்டுப்பொறி" எனப்படும்.

ஓலையை எழுதப் பயன்படுத்தப்படும் ஆணி இரும்பு, வெண்கலம் முதலான உலோகங்களால் தயாரிக்கப்படும். இவ்வித ஆணிகள் (Stylus) "எழுத்தாணி", "எழுத்தூசி",

"ஓலை ஆணி", "ஓலைத்தீட்டும் படை" எனப் பல பெயர்களால் வழங்கப்படும். இந்த ஆணி "குண்டெழுத்தாணி", குடவெழுத்தாணி", (குடைவெழுத்தாணி) "மடக்கெழுத்தாணி" எனப் பல வகைகளாகப் பயன் படுத்தப்பட்டன.

ஓலைச்சுவடி, நூல்கள், பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவை வைத்துப் பாதுகாக்கப்படும் பேழை "ஓலைச் சம்புடம்" எனப்படும்.

ஓலைச்சுவடிகள் அடங்கிய ஓலைச் சம்புடம் முதலியவற்றை வைத்துப் பாதுகாக்கப்படும் இடம் "சரஸ்வதி பண்டாரம்" என்றழைக்கப்பட்டது.

ஓலைச்சுவடி நூல்களையும், ஆவணங்களையும், பதிவேடுகளையும் வைத்துப் படிப்பதற்கு பயன்படுத்தப் படும் சாய்வுப்பலகை "சரஸ்வதி பீடம்" எனப்பட்டது.

ஓலைச்சுவடிகள், ஆவணங்கள் போன்றவை எழுதும் பணியாளர்களுக்கு "ஓலை எழுத்துப்பேறு" என ஊதியமும் "ஓலை எழுத்து விநியோகம்" எனப்படும் சன்மானமும் வழங்கப்பட்டன.

அரண்மனைகளில் ஓலை எழுதுவோர் "மந்திர ஓலை" என அழைக்கப்பட்டனர்.

மந்திர ஓலை என்பவரால் எழுதப்பட்ட ஓலைகளை சரிபார்த்து ஒப்புதல் அளிக்கும் அதிகாரி "ஓலை நாயகம்" எனப்பட்டார்.

அரசு அலுவலகங்களிலும் பிற அலுவலகங்களிலும் கணக்கு ஓலை மற்றும் பதிவேடுகளை எழுதுவோர் "கணக்கன்" அல்லது "கரணத்தான்" எனப்பட்டனர்.

ஓலைச் சம்புடம் அடங்கிய தூக்கினைத் தூக்கிச் செல்லும் பணியாளர் "தூக்குத்தூக்கி" என்றழைக்கப்பட்டார்.

ஓலைகளில் பதிவேடுகள் (கணக்குகள்) எழுதும் கணக்கர்களுக்கு "கணக்கப்பேறு" என ஊதியமும், "கணக்கக்காணி" என நில மானியமும் வழங்கப்பட்டன. ஓலைச்சுவடிகள் எழுதப் பனை ஓலைகளை பதப்படுத்தி கொடுப்பதையும், சுவடி பார்த்துப் படியெழுதிக் கொடுப் பதையும் அக்காலத்தில் பலர் பிழைப்புக்கான தொழிலாகவே செய்து கொண்டிருந்தனர்.

இப்போது இருப்பது போலவே பண்டைக் காலத்திலும் அனைத்துத் துறைகளுக்கும் பல்வேறு பதிவேடுகள் நடைமுறையில் இருந்துள்ளன. அந்தப் பதிவேடுகள் "பொத்தகம்" என்ற பெயரால் வழங்கப்பட்டன.

காகிதச்சுவடிகள்

காகிதம் செய்யும் முறையைக் கண்டுபிடித்த பெருமை சீனருக்கே உண்டு. சீனர்கள் கி. பி. 105ல் காகிதம் செய்யும் முறையைக் கண்டனர். வேற்று நாட்டவர் அறிந்துகொள்ளா வண்ணம் சீனர்கள் இக்கலையை மறைத்து வைத்திருந்தனர். பிறகு கிழக்கு துர்கிஸ்தான் படையெடுப்பில் சில சீனர்கள் இக்கலையை அக்கைதிகளின் மூலம் துருக்கியர் இத்தொழிலை தெரிந்து கொண்டு ஐரோப்பாவிலும் இதனைப் பரவச்செய்தனர். அதன் பின்னர் முகலாயர் இதனை இந்தியாவிற்கு கொண்டு வந்தனர். காகிதத் தொழில் செய்வதற்கு தூய்மையான நீர் தேவையானதால் இத்தொழிலை முதலில் காஷ்மீரத்திலும், பின்னர் பாஞ்சாலத்திலுள்ள சாயல்கோட்டிலும் செய்ய ஆரம்பித்தனர். இவ்விடங்களில் செய்யப்பட்ட காகிதங்கள் மிக உயர்தரமாகவும், உறுதியாகவும் இருந்தன.

ஆங்கிலேயர் இந்தியாவில் ஆட்சி செய்ய ஆரம்பித்ததும் அவர்களின் நிருவாகத்தில் அனைத்தும் காகிதத்திலேயே எழுதப்பட்டன. அதனால் காகிதம் அவர்களுக்கு அதிக அளவில் தேவைப்பட்டது. அதன் விளைவாக ஆங்கிலேயரின் ஆட்சி பீடமாக விளங்கிய சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலெல்லாம் காகிதம் செய்வதற்கு மக்களை ஊக்குவித்தார்கள். இதனால் கையினால் காகிதம் செய்யும் தொழில் வெகு விரைவில் பரவியது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலம்வரை நம் நாட்டிற்குத் தேவையான காகிதம் முழுவதும் ஆங்காங்கு உற்பத்தி செய்யப்பெற்று வந்தது. எப்போதாவது அதிகம் தேவைப்பட்டால் சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்டது.

பின்னர் இயந்திரங்களினால் காகிதம் செய்யும் முறை கி.பி.1797ஆம் ஆண்டில் பிரான்சில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் காகித ஆலை கி. பி. 1970ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் நிறுவப்பட்டது. இயந்திரத்தினால் செய்யும் காகிதத்தைவிட கையினால் செய்யும் காகிதம் உறுதியாக இருந்தது. ஆனால் இயந்திரத்துடன் கைத்தொழில் போட்டியிட முடியாமல் அடியோடு அழிந்துபோனது.

ஆங்கிலேயர் கையினால் காகிதம் செய்பவர்களிடம் தொழில் வரி விதித்து வாங்கினர். இது பற்றிய விவரங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறையிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகளில் உள்ளது. ஆகவே செங்கற்பட்டு மாவட்டத்தில் காகிதம் செய்யும் தொழில் நடைபெற்றது தெரியவருகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் காகிதங்கள் செய்யும் பட்டறைகள் மன்னார்குடி, கும்பகோணம், பந்தநல்லூர், திருக்காட்டுப்பள்ளி, திருவாரூர் ஆகிய இடங்களில்

இருந்துள்ளன. அவற்றில் பலவிதமான காகிதங்கள் தயாரித்து தஞ்சை மராட்டிய அரசுக்கும், கும்பினிக்கும் வேண்டிய காகிதங்கள் கொடுக்கப்பெற்று வந்தன.

தற்காலத்தில் எழுதப்படும் நில புலன்களின் கிரய சாசனங்கள், ஒத்தி அடமானம் போன்ற கடன் சாசனங்கள், பங்காளிகளின் பாகப்பிரிவினைப் பத்திரம், ஒப்பந்தங்கள், விவாகரத்து, அதிகாரப் பத்திரம் (Power of Attorney) போன்ற சாசனங்கள் பண்டைக்கால ஓலைச் சாசனங்களில் கண்டுள்ள முறையினைப் பின்பற்றியே மாறுதலின்றி எழுதப்பட்டு வருகின்றன.

ஆவணங்களின் பெயர்கள் பற்றி சுவடிகளில் காணப்படுபவன

எடுத்த உரிமைகளைத் திரும்ப அளித்தற்குரிய சாசனம் மற்றும் பிறர் கொடுமை செய்யாவண்ணம் நியமிக்கப்படும் சாசனம் "அஞ்சாபட்டயம்" என அழைக்கப்பட்டது.

வணிகர் ஒருவர் மற்றொரு வணிகருக்கு இவ்வளவு ரூபாய் வரை கொடுக்கலாம் என்று எழுதிக்கொடுக்கும் சீட்டு "அடகுச் சீட்டு" எனப்பட்டது.

ஆள்அடிமைப் பத்திரம் "அடிமை ஓலை" என்றழைக் கப்பட்டது.

சொத்தினை ஈடாக வைத்து எழுதிக்கொடுக்கும் அடமானக் கடன் பத்திரம் "அடவோலை அல்லது அடைவோலை" என்றழைக்கப்பட்டது.

தான் செய்யவேண்டிய வேலையினைத் தன் பொருட்டு பிறர் செய்வதற்கு அதிகாரம் அளிக்கும் பத்திரம் "அதிகாரப் பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

பங்காளிகள் ஏற்படுத்திக் கொள்ளும் பாக அட்டவணைப் பத்திரம் "அம்ச பத்திரம் அல்லது அவகாசமுறி" என்றழைக்கப்பட்டது.

எழுத்து மூலமான அறிவிப்பு "அறிக்கைப் பத்திரம், அறிக்கை ஓலை, இஸ்தியார், இஸ்தியார் நாமா" என்றழைக்கப்பட்டது.

நிலங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் விற்பனைச் சாசனம் "அறுதிக் கிரயம், அறுதிச் சாசனம், அறுதிச் சீட்டு, அறுதி உறுதி, கிரய சாசனம், கிரயச் சீட்டு, கிரயப்பத்திரம், விலை ஆவணம், நிலவிலை ஆவணம்" என்றழைக்கப்பட்டது.

ஒப்பந்தம் காலம் முடிந்து உரிமை அற்றுப்போன ஒப்பந்தச் சீட்டு ஓலை, காலாவதி ஆன பத்திரம், "அறுதிமுறி அறை ஓலை" என்றழைக்கப்பட்டது.

தானியங்கள் அறுவடை செய்ய அனுமதிக்கப்பட்ட சீட்டு "அறுப்புச்சீட்டு" என்றழைக்கப்பட்டது.

மன்னனுடைய கட்டளைத் திருமுகம் "ஆக்கினைப் பத்திரம், ஆணையோலை, கோனோலை, திருமுகம், ஸ்ரீமுகம்" என்றழைக்கப்பட்டது.

உடன்படிக்கைச் சாசனம் "இசைவுச் சீட்டு, இசைவோலை" என்றழைக்கப்பட்டது.

திருக்கோயில்களில் வழிபாடு செய்யும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதற்கு அமைந்த உடன்பாட்டுச் சீட்டு "உபயச் சீட்டு" என்றழைக்கப்பட்டது.

சொத்தைக் கிரயம் வாங்கியவர் அச்சொத்தினை விற்பனை செய்ய நேரிட்டால் கிரயம் கொடுத்தவருக்கே திரும்ப கிரயம் செய்வதாக ஒப்பந்தம் செய்து எழுதும் கிரயப்பத்திரம் "எதிர்ச்சீட்டு, எதிரிடை முறி, எதிர்நடைப் பத்திரம், எதிர்முறி" என்றழைக்கப்பட்டது.

எல்லை வழக்குத் தீர்த்து எழுதும் பத்திரம் "எல்லைப் பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

வாங்கும் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தும் வரை வட்டிக்கு ஈடாக ஈட்டுத்சொத்தை அனுபவித்து வரும் உரிமையுடன் கூடிய கடன் பத்திரம் "ஒற்றிப் பத்திரம், போக்கிய பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

வாங்கும் கடனுக்கு ஆதாரமாக எழுதிக் கொடுக்கும் ஆவணம் "கடன் ஓலை, கடன் சீட்டு, கடன் முறி, கடன் பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

நிலக்குத்தகைப் பத்திரம் என்பது "கவுல் நாமா, கவுல் சீட்டு, கவுல் பத்திரம், குடியுடன்படிக்கை, குத்தகைச் சீட்டு, சாகுபடி முச்சலிக்கா, செய்கைச் சீட்டு, கபுலியத் நாமா" என்றழைக்கப்பட்டது.

விவரக்குறிப்பேடு என்பது "கைபீது, கைபீயத்து" என்றழைக்கப்பட்டது.

சபையோரைத் தேர்ந்தெடுக்கக் குடத்திலிடும் சீட்டு (Ballot Paper) என்பது "குடவோலை" என்றழைக்கப் பட்டது.

எல்லாவற்றிற்குமாகக் கொடுக்கப்படும் அதிகாரப் பத்திரம் என்பது "சர்வ முத்தியார் நாமா" என்றழைக்கப் பட்டது.

தானே தன் கையால் எழுதிய ஆவணம் என்பது "சுவஸ்த லிகிதம், சுகஸ்த லிகிதம், சொஸ்த லிகிதம்" என்றழைக்கப்பட்டது.

பிறர் மகனைத் தன் மகனாகத் தத்து எடுத்தல் என்பது "ஆவணம், சுவீகாரப் பத்திரம்" என்றழைக் கப்பட்டது.

கடிதம் எழுதிச் சுருட்டி முத்திரையிடப்பட்ட ஓலை என்பது "சுருள் ஓலை" என்றழைக்கப்பட்டது.

நில உரிமையை விட்டுவிட எழுதிக்கொடுக்கும் மனு என்பது "சோடி ராஜிநாமா" என்றழைக்கப்பட்டது.

தவணைக்குள் ஒத்தித்தொகை செலுத்தாவிடில் ஒத்திக்காரருக்கே நிலம் உரிமையாவது என்ற நிபந்தனைக்குட்பட்ட ஒத்தி ஆவணம் என்பது "தவணைக் கிரயசாசனம்" என்றழைக்கப்பட்டது.

கெடுவைத்து எழுதிய பத்திரம் என்பது "தவணைச் சீட்டு" என்றழைக்கப்பட்டது.

ஒருவருக்குக் கொடை வழங்கின விவரம் குறித்த ஆவணம்(Gift Deed) என்பது "தான பத்திரிகை, தான சாசனம், தான பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

குலுக்கிப்போட்டு எடுத்தல் முதலிய வகையால் தெய்வ சித்தமறியும் சீட்டு என்பது "திருவுளச்சீட்டு" என்றழைக்கப்பட்டது.

முகூர்த்த ஓலை என்பது "நாளோலை" என்றழைக் கப்பட்டது.

வழக்குத் தீர்ப்பு ஏடு என்பது "நியாயப்பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

தமது வசதிக்குத் தக்கவாறு தம்முடைய சொத்துக்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வதற்கான ஆவணம் என்பது "பரிவர்த்தனைப் பத்திரம்" என்றழைக் கப்பட்டது.

தொகையைப் பெற்றுக்கொண்டவர் பற்றுச் சீட்டாக எழுதி வழங்கும் ஓலைத்துணுக்கு என்பது "பற்று முறி" என்றழைக்கப்பட்டது.

ஆதாரமாக எழுதித் தரும் உறுதிச் சீட்டு (உத்திரவாதச் சீட்டு) என்பது "பிடிபாடுச்சீட்டு" என்றழைக்கப்பட்டது.

விற்பவர் வாங்குபவர் இருவரும் விலையை உறுதி செய்து, கிரயத்தை ஒப்புக்கொண்டதற்குரிய சான்றாக இருவரும் எழுதிக்கொள்ளும் உடன்படிக்கை உறுதிச் சீட்டு (Agreement) என்பது "பிராமண இசைவுச் சீட்டு" என்றழைக்கப்பட்டது.

பதிவேடுகள்

ஓலைச்சுவடியில் நூல்கள் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் பதிவேடுகள் (Registers) ஓலையில் எழுதியிருப்பதைப் பலர் பார்த்திருக்க மாட்டார்கள். பதிவேடுகள் பெரும்பாலும் ஓராண்டுக்கு_ மட்டும் பயன்படுத்தப்படும். ஆகவே பதிவேடுகள் எழுதப் பதப்படுத்தப்படாமல் நறுக்காமல் நீளமாக உள்ள முழு ஓலைகளை அப்படியே பயன்படுத்துவார்கள். பல ஆண்டுகள் நடைமுறையிலிருக்க வேண்டிய பதிவேடுகளுக்கு மட்டில் அடிப்பாகமும் நுனிப்பாகமும் சிறிதளவு நறுக்கப்பட்டு பதப்படுத்துதல் முறைப்படி பதப்படுத்தப்பட்ட ஓலைகளில் எழுதுவார்கள்.

இப்போது காணப்படும் கல்வெட்டுக்களைப் பதிவு செய்து வைக்கவும், அப்போது ஒரு புத்தகம் நடைமுறையி லிருந்துள்ளது. அதனை "இவ்வனைவர் கண்காணியாலும், கணக்கினாலும் கல்வெட்டு விகிதப்படி முன்பு கல்வெட்டுச் சேர்த்த பொத்தகப்படி ஸ்ரீவிமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்கவென்று அதிகாரிகள் இருமுடி சோழ மூவேந்த வேளார் நியோகமும்" என்ற கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

தமிழகத்தில் பண்டைக் காலத்தில் அரசுக்கு நில வருவாயே முதன்மை வருவாயாக இருந்துள்ளது. இந்த வருவாயுடன் வாணிபத் தொழிலுக்கும், வாணிபப் பண்டங்களுக்கும் வரிவிதித்து வாங்கப்பட்டுள்ளன. இவ்வகையான வரிவிதிப்பு மற்றும் வசூல் சம்பந்தமாகப் பல பதிவேடுகள் ஓலைகளில் எழுதிப் பராமரிக்கப்பட்டு வந்தன. இதுபற்றிக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் விளக்கமாகக் கூறுகின்றன.

ஒவ்வொரு புத்தாண்டுத் தொடக்க நாளன்று புதிய ஆண்டுக்கான பதிவேடுகள் தொடங்கப்படுவதை சோழ மன்னர்கள் ஒரு விழாவாகவே கொண்டாடியுள்ளனர். புத்தாண்டின் தொடக்க நாளன்று அரண்மனையில் புதுக்கணக்கு எழுதும் தொடக்கவிழா நடைபெறும். அப்போது பேரரசனும், குறுநில மன்னர்களும், மற்றோரும் அமர்ந்திருப்பர். அரண்மனைக் கணக்கன் புதிய கணக்கினைத் தொடங்கி, அதில் மன்னனின் மெய்க்கீர்த்தியை எழுதுவார். குறுநில மன்னர்கள் முதன் முதலாக அந்த ஆண்டிற்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருள், காணிக்கைப் பொருள் ஆகியவற்றைச் செலுத்துவார்கள். அதனைக் கணக்கன் புதுக்கணக்கில் வரவு வைத்து எழுதுவார். அதில் அரசன் முதன் முதலாகத் தன் கையொப்பமிட்டு விழாவை நிறைவு செய்வார். இதனை,

“மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாயிற் புரத்து
மணிநா வொடுங்க முரசுகள் முழங்க
விசையமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழிஇம் மாநிலங் காக்கத்
திருமணி பொற்றோட் டெழுது புத்தாண்டு
வருநிறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் செறிந்த செம்பொற் குவையால்”

என்ற விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியமுடிகிறது.

தற்போது கிராமக் கணக்குகளாக ஏ(A), பி (B) ஆகிய நிலப்பதிவேடுகளும், 1 முதல் 24வரை எண்களிடப்பட்ட தினந்தோறும் எழுதும் பதிவேடுகளும், மாதந்தோறும் எழுதும் பதிவேடுகளும், ஆண்டுதோறும் எழுதும் பதிவேடுகளும், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை எழுதும் பதிவேடுகளுமாக 42 பதிவேடுகள் நடைமுறையில் இருக்கின்றன. இவை தவிர புராதனச் சின்னங்களின் விவரப்பதிவேடு, சந்தன மரங்களின் விவரப்பதிவேடு, சர்வே எல்லைகளைக் குறிக்கும் கற்களின் விவரப் பதிவேடு, திட்டங்களுக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பதிவேடு போன்ற பல பதிவேடுகளும் நடைமுறையிலிருக்கின்றன.

இப்பதிவேடுகளெல்லாம் பிற்காலச் சோழ மன்னர் ஆட்சிக் காலங்களில் நடைமுறையிலிருந்த கணக்கு களேயாகும். முதலாம் இராசராசன் தன்னுடைய 16ஆம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1001 முதல் கி. பி. 1003வரை சோழநாடு முழுவதையும் அளந்து கணக்கிடுமாறு ஆணையிட்டார். இந்தப் பணி குரவன் உலகளந்தான் இராசராசமாராயன் என்ற அதிகாரியின் தலைமையின்கீழ் நில அளவை செய்யப்பெற்று, நிலங்களை வகைப்படுத்தித் தரம் பிரித்து நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

இவ்வேற்பாடே தமிழகத்தில் முதன் முதலாகச் செய்யப்பட்ட நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் ஆகும். நில அளவையும், நிலவரி நிர்ணயமும் செய்த குரவன் உலகளந்தான் இராசராச மாராயன் என்பவரே தமிழ்நாட்டின் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்துறையின் முதல் இயக்குநராகப் பதவியேற்றவராக இருத்தல் கூடும்.

அடுத்து முதற் குலோத்துங்கசோழனின் 16ஆவது ஆட்சியாண்டாகிய கி. பி. 1086இல் திருவேகம்பம் உடையானான உலகளந்தானான திருவரங்கத்தேவன் என்ற

அதிகாரியின் தலைமையில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் தொடங்கப்பட்டு கி. பி. 1088இல் முடிவுற்றது.

அதன் பிறகு விஜயநகர மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணதேவராயர் ஆட்சியின்போது கி.பி. 1513ஆம் ஆண்டில் நில அளவையும், நிலவரித்திட்டமும் செய்து முடிக்கப்பட்டது.

இவ்வாறு நில அளவை செய்து நிலங்களைத் தரமிட்டு நிலவரித்திட்டம் செய்து முடிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் பதிவேடு தரப்பொத்தகம் அல்லது ஊர்ப் பொத்தகம் எனப்பட்டது.

இந்த "தரப்பொத்தகம்" அல்லது "ஊர்ப்பொத்தகம்" என்பதுதான் இப்போது நடைமுறையிலிருக்கும் நிலையான கிராமக் கணக்காகிய "அ" பதிவேடு (A Register) எனப்படுகிறது.

பண்டைக்காலத்தில் குடிமக்கள் நிலங்களுக்காகச் செலுத்தும் வரி விவரப்பதிவேடு "வரிப்பொத்தகம்" எனப்பட்டது. இது தற்போது நடைமுறையிலிருக்கும் கிராமக் கணக்கு 16 எண் "வரியேடு" என்ற பதிவேடாகும். இந்தப் பதிவேடு அந்நாளிலிருந்து இந்நாள்வரை பெயர்கூட மாற்றமின்றி வழங்கப்பட்டு வருவதைக் காணலாம்.

இதுபோலவே அனைத்துப் பதிவேடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பழைய முறைப்படியே இப்போதும் கையாளப்பட்டு வருவதைக் காணலாம்.

ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்த பதிவேடுகள் வருமாறு, அஞ்சனா ஜாபிதா என்பது சாகுபடி மதிப்புப் புள்ளிக் கணக்கு ஆகும்.

அடைச்சீட்டு என்பது வரி செலுத்தியதற்கான ரசீது ஆகும்.

அமானத்துச் சிட்டா என்பது பொதுக்குறிப்பேடு ஆகும்.

இராசிக்கணக்கு என்பது கூட்டு வியாபாரத்தில் கூட்டாளிகள் தனித்தனியாகக் கணக்கிடும் இலாப நட்டக்கணக்கு ஆகும்.

இருசால் நாமா என்பது தண்டற்பணம் அரசுக் கருவூலத்தில் செலுத்தியதற்கான விவரக்கணக்கு ஆகும்.

இனாயத் நாமா என்பது இனாம்களின் விவரம் குறித்தப் பதிவேடு ஆகும்.

எதிர் கணக்கு, எதிர் நடைக்கணக்கு என்பது கணக்கரால் எழுதப்பட்டு ஊர்ச்சபையினருக்கோ அல்லது கண்காணிப்பாளருக்கோ அனுப்பப்படும் கணக்கின் பிரதி ஆகும்.

ஏர்க்குறிப்பு ஏடு என்பது ஏர் உழவு செய்வதைக் குறித்த தினசரிக் கணக்கு ஆகும்.

களநடைக் கணக்கு என்பது அறுவடையாகிக் களத்தில் உள்ள தானியக் கணக்கு ஆகும்.

கிஸ்தி பந்தி, கிஸ்தி பேரிஸ்து தவணை கணக்கு என்பது தவணை முறையில் செலுத்தும் நிலவரித்தொகை ஆகும்.

குடிவாரக் கணக்கு என்பது குடிமக்கள் மேல் வாரமாகக் கொடுக்கவேண்டிய தானியக் கணக்கு ஆகும்.

கைக்கணக்கு, கைச்சிட்டா, கையேடு, கையோலை, கைச்சீட்டு என்பது தினசரிக் கணக்குக் குறிப்பேடு ஆகும்.

கைக்குறிப்பு ஏடு என்பது நாட்குறிப்பு ஏடு ஆகும்.

கைச்சாத்து என்பது செலுத்திய தொகைக்குக் கொடுக்கப்படும் ஒப்புதல் சீட்டு ஆகும்.

கோஷ்பாரா என்பது ஒரு கணக்கின் முடிவான மொத்தத் தொகையினைக் காட்டும் விவரப்பட்டியல் ஆகும்.

சாகுபடிக் கணக்கு என்பது நஞ்செய், புஞ்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர் விவரக்கணக்கு ஆகும்.

சிறுமுறி என்பது பற்று ரசீது மற்றும் சிறிய கட்டளைக் குறிப்பு ஓலை ஆகும்.

டவுல் கணக்கு, டவுல் நாமா என்பது வரி செலுத்து வோருக்குக் கொடுக்கும் தீர்வை விவரக் கணக்குக் குறிப்பு ஆகும்.

டவுல் ஜமா என்பது ஒரு ஜில்லா அல்லது கிராமத்தின் மொத்தத் தீர்வையின் வசூல் பாக்கி விவரங்களைத் தெரிவிக்கும் கணக்கு ஆகும்.

கடந்த 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஓலையில் எழுதப்பட்டு நடைமுறையிலிருந்த அரசுப் பதிவேடுகள்.தரப்படி வகையேடு, தரப்படிக் கணக்கு, தரம் பேரீஜ் கணக்கு, தரம் பைசலாதி கணக்கு, தரம்வாரி கணக்கு, தர்ஜாவாரி கணக்கு என்பது கிராம நிலங்களின் தரம் சாகுபடி, வரி முதலியவற்றைக் குறிக்கும் கணக்கு. கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் பார்நார்ட் என்ற ஆங்கிலேயப் பொறியாளரால் செங்கற்பட்டு மாவட்டம் நில அளவையும், நிலவரித் திட்டமும் செய்யப்பட்டது. அந்தக் கணக்குகள் தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ளவை. அவை பார்நார்ட் தரப்படிக் கணக்குகள் என்று மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு வந்தது.

தரப்படித் தொகையேடு என்பது தரப்படி வகை யேட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ள விவரங்களைச் சுருக்கிக் கூறும் உள்ளடக்கக் கணக்கு ஆகும்.

தீர்வை வகையேடு என்பது வரி நிர்ணய விவரத்தினைக் கூறும் கணக்கு. இது தரப்படி வகையேட்டில் கண்ட தீர்வை விதிப்பின் விவரம் கூறும் கணக்கு ஆகும்.

தீர்வைத் தொகையேடு என்பது தீர்வை வகையேட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ள விவரங்களைச் சுருக்கிக் கூறும் உள்ளடக்கக் கணக்கு ஆகும்.

தீர்வைத் திட்டம் ஏடு என்பது தீர்வை விதிக்கப்பட வேண்டிய வரன்முறைகளைத் தெரிவிக்கும் கணக்கு ஆகும்.

மேரைச் சட்டம் ஏடு என்பது கிராம ஊழியர் மற்றும் அறநிலையங்களுக்கு வழங்கப்படும் மேரைகளின் அளவு அதனைப் பெறும் உரிமையாளர் ஆகிய விவரங்களைக் கூறும் ஏடு ஆகும்.

சுதந்திரத் திட்டம் ஏடு என்பது கிராம ஊழியர் மற்றும் அறநிலையங்களுக்குக் களத்தில் உரிமையாக வழங்கப்படும் தானிய அளவினையும் அதனைப்பெறும் உரிமையாளர் விவரத்தினையும் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

கோவில் ஈஸ்துவை ஏடு என்பது கோவில்களுக்கு வழங்கப்பட வேண்டிய இனாம் முதலியவற்றையும், அவற்றைப் பெறவேண்டிய உரிமையாளர்களையும் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

கோவில் ஈஸ்துவைத் தீர்ப்பு ஏடு என்பது கோவில் களுக்கு வழங்கப்பட்ட இனாம் முதலிய விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

தூக்குரி ஈஸ்துவை ஏடு என்பது கிராமக் காவல்காரருக்கு வழங்கப்பட வேண்டிய இனாம் முதலிய விவரங்களையும் அவற்றைப் பெறவேண்டிய உரிமையாளரையும் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

கிராம ஈஸ்துவை ஏடு என்பது கிராமத்தின் காணியாட்சிக்காரர் முதலானவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இனாம் முதலிய விவரங்களை தெரிவிக்கும் ஏடு ஆகும்.

மனைவரிக் கணக்கு ஏடு என்பது கிராமத்திலுள்ள வீட்டு மனைகளுக்கு விதிக்கப்பட்ட வரி விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

உப்பளம் வாரச் சட்டம் ஏடு என்பது உப்பளங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளின் வாரப் பங்கு வீதங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

உப்பளம் மேரைச் சட்டம் ஏடு என்பது உப்பளங் களிலுருந்து கிராம ஊழியர்கள் மற்றும் அறநிலையங்களுக்கு வழங்கப்படும் மேரைகளின் அளவு கூறும் ஏடு ஆகும்.

உப்பளம் சுதந்திரத் திட்டம் ஏடு என்பது உப்பளங் களிலிருந்து கிராம ஊழியர்கள் மற்றும் அறநிலையங்களுக்கு உரிமையாக வழங்கப்படும் அளவு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

தும்பால் மானியம் வயணம் ஏடு என்பது கிராம ஊழியர் மற்றும் அறநிலையங்களுக்கு வழங்கப்படும் இறையிலி நிலங்களின் விவரம் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

தோப்பு வயணம் ஏடு என்பது கிராமத்திலுள்ள தோப்புகளின் விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

கோயில் வயணம் ஏடு என்பது கிராமத்தில் அமைந்துள்ள கோயில்களையும் அவை சம்பந்தப்பட்ட விவரங்களையும் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

மோரை தரப்படி ஏடு என்பது கிராமத்தில் பயிரிடப் படாமல் கரடு முரடாக அமைந்துள்ள நிலங்களின் தரம் முதலான விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

தாங்கல் வயணம் ஏடு என்பது கிராமத்திலுள்ள சிறிய பாசன ஆதாரங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

நீர்வளம் ஏடு என்பது கிராமத்தின் நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களின் நீர் வரவு செலவு இருப்பு தெரிவிக்கும் ஏடு ஆகும்.

மேல்வாரம் மேரைத் திட்டம் ஏடு என்பது மேல்வாரம் தானியத்தில் கிராம ஊழியர்கள் அறநிலையங்கள் முதலியவற்றிற்கு வழங்கப்படும் மேரையின் அளவு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

பங்குமாலை ஏடு என்பது கிராமத்தின் காணி யாட்சிக்காரர்களுக்கு உள்ள பங்கு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

வீடு வயணம் ஏடு என்பது கிராமத்தில் அடங்கிய வீடுகளின் வகையினை விவரமாகத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

முச்சலிக்கா ஏடு என்பது குடிமக்கள் அரசுக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தம், ஒப்புதல் வாக்குமூலம் முதலானவற்றைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

ரொக்க குத்தகை தானிய குத்தகை ஏடு என்பது கிராமத்தில் காணியாட்சி நிலங்களில் பயிரிடும் குடியானவர்

ஒரு குறிப்பிட்ட ரொக்கப் பணமாகவோ அல்லது குறிப்பிட்ட அளவு தானியமாகவோ குத்தகை கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்ட விவரத்தினைக் குறித்த ஏடு ஆகும்.

கோலடி சுதந்திரத் திட்டம் ஏடு என்பது அறுவடை செய்த தானியத்தைக் கதிரடித்தப் பிறகு தாளில் தங்கியுள்ளதை மாடுகட்டிப் போரடித்து உதறியெடுத்துத் தூற்றிய தானியத்தில் கிராமப் பணியாளர், அறநிலையங்கள் ஆகியவற்றிற்கு உரிமையாக வழங்கப்படும் அளவினைத் தெரிவிக்கும் ஏடு ஆகும்.

இவ்வகை ஆவணங்களும் பதிவேடுகளும் தமிழகத்தில் பண்டைக் காலத்தில் வழக்கத்தில் இருந்தது போலவே, பின்னர் வந்த விஜயநகர அரசு, மராட்டியர், ஆங்கிலேயர் ஆகியோர் ஆட்சிக்காலங்களிலும், தொடர்ந்து பின்பற்றப்பட்டு நடை முறையில் வந்துகொண்டிருந்தது. தற்போது வழக்கத்திலுள்ள ஆவணங்களின் வாசகங்கள் கூடக் கல்வெட்டுக்களில் காணப்படுவது போலவே மாற்றமின்றிக் கையாளப்படுவதைக் காணலாம். அரசுத் துறைகளிலும், தனியார் அலுவலகங்களிலும் வழக்கத்தி லுள்ள இப்போதையப் பதிவேடுகள் பெரும்பாலும் பண்டைக் காலத்திய முறையினைப் பின்பற்றியே மாற்றமின்றித் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

இவ்வகை ஓலைச்சுவடி ஆவணங்கள் பதிவேடுகள் ஆகியவற்றில் காணப்படும் செய்திகளோடு அரசினர் ஆவணக்காப்பகம், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிலுள்ள ஆவணங்களிலும் பதிவேடுகளிலும் காணப்படும் செய்தி களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தால் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகாலத் தமிழர்களின் வரன்முறையான பண்பாடு, நாகரீகம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் கல்வி, பொருளாதார வசதி,

வாணிபம், வேளாண்மை, குடியிருப்பு வசதி, அரசியல் போன்ற அனைத்துப் புள்ளி விவரங்களும் கிடைக்கும். அதற்கும் மேலாக நம்மை சங்ககாலம் வரை இழுத்துச் சென்று அப்போதைய தமிழகத்தைப் படம்பிடித்துக் காட்டும்.

ஏட்டில் கையெழுத்துத் தெளிவாக எழுதப் பயிலாதவரைச் சான்றோர் கடிந்துரைத்துள்ளனர்.

"வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப் பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

என்னும் ஔவை மூதாட்டியின் வாக்கு இதற்குச் சான்றாகும்.

எழுதப்பட்ட சுவடிகளைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றின் மீது மஞ்சள் பூசப்பட்டது. அவை உடைந்து விடாமல் இருக்க ஓலைப்பெட்டிகளிலும், மரப்பெட்டி களிலும், சிவப்பு அல்லது காவித் துணிகளில் சுற்றியும் வைக்கப்பட்டன. மரப்பெட்டிகளையும், ஓலைப்பெட்டி களையும் தரையில் வைத்தால் கரையான் அரித்துவிடும் என்பதால், அவைகளைக் கரையான் அரித்துவிடாமல் இருக்க மேலே கட்டித் தொங்கவிட்டனர். அப்படி தொங்குவது அசை எனப்பட்டது. ஓலைகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் மை பூசப்பட்டுத் தெளிவாகத் தெரியச் செய்யப்பட்டன. மேற்சொன்னவற்றைத் தமிழ் விடுதூது எனும் நூலின் பாடல் வரிகள் கீழ்வருமாறு சொல்கின்றன.

கண்மணிபோற்
பள்ளிக்கூடத்தசையாம் பற்பல தொட்டிற் கிடத்தித்
தள்ளிச் சிறார் கூடித்தாலாட்டி உள்ளிலகு
மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்

கி. பி. 1887இல் பதிப்பாளர் பெருமகனார் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பதிப்பித்த கலித்தொகை நூலே சங்க நூல்களுள் முதன்முதல் அச்சுருவம் பெற்ற நூலாகும்.

இந்நூலின் பதிப்புரையில் சுவடிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு அவர் விடுத்த அறைகூவல் நம் உள்ளத்தைத் தொடுவன.

ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒன்றைப் புரட்டும் போது துண்டுதுண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால், வாலுந்தலையுமின்றி நாலுபுறமும் பாணிக் கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது.

பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியம் இல்லை. சரசுவதியைத் தம்பால் வசிக்கப்பெற்ற வித்வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர் நும் கருணை இந்நாள் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும்தான் மீரும். சங்கம் மரீஇய நூல்களுள் சில இப்போது தானும் கிடைப்பது. சமுசயம் எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கருணை பிறக்க வில்லையா? ஆச்சரியம் அயலான் அழியக் காண்கிலும் மனந்தளம்புகின்றதே. தமிழ்மாது நும் தாயல்லவா, அவள் அழிய எமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா, தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களா?

இவருக்குப்பின்தான் டாக்டர் உ.வே. சாமிநாதையர், மகாவித்வான் ரா. இராகவையங்கார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை முதலியோர் தமிழ்நூற்பதிப்பு முயற்சியில் ஈடுபட்டுப் பற்பல தமிழ்க் கருவூலங்களை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச்சுவடிகள் கிட்டுவது இன்று அரிதாயுள்ளது. நூற்சுவடிகளைப் பொறுத்தவரை 17ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சுவடிகளைக் காணக்கூடவில்லை. கல்கத்தா தேசிய நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளுள் கி. பி. 1611இல் எழுதப்பெற்ற திவாகரச் சுவடியும் உள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகத்திலுள்ள ஓலைச் சுவடித்துறையின் சுவடி நூலகத்தில் கி. பி. 1657இல் எழுதப்பெற்ற கம்பராமாயணப் பாலகாண்டச் சுவடி பழமையானது.

புதிதாகச் சுவடி பயிலும் மாணவர்கள் எளிதில் ஒரு சுவடி எதனைக் குறித்தது என அறிய வசதியாக கீழே கொடுத்துள்ள வார்த்தையைக்கொண்டு அறியமுடியும். ஆனால் எல்லா சுவடிகளிலும் இதுபோல் வரும் என எதிர்பார்க்கக் கூடாது.

சுவடி நூலின் இடது ஓரத்தில்

நன்றாக குரு வாழ்க

குருவே துணை

சுப மஸ்து

திருச்சிற்றம்பலம்

சிவகடாட்சம்

பொன்னம்பலத்தரசே துணை

இராம செயம்

கிருஷ்ண சகாயம் என்றும்,

சிற்றிலக்கியச் சுவடிகளில்

கணபதி துணை
குமரன் துணை
சரசுவதி துணை
அரிஓம் நன்றாக
தேவி சகாயம் துணை என்றும்,

மருத்துவச் சுவடிகளில்

சிவக்கிருபை உண்டாகவும்
குருவே துணை
வாலை துணை
தேவி சகாயம் துணை என்றும்,

பெரிய திருமடல், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திவ்ய பிரபந்தம் போன்ற சுவடிகளில்

ஆழ்வார் திருவடிகளே சரணம்
பெரிய வாச்சான் பிள்ளை
திருவடிகளே சரணம் என்றும்,

திருப்பாவை சுவடியில்

ஆண்டாள் திருவடிகளே
சரணம், ஆழ்வார் திருவடிகளே
சரணம் என்றும்,

சமண நூற் சுவடியில்

சுப மஸ்து என்றும்,

சைவ நூற்சுவடியில்

சுப்ரமணியர் துணை, மீனாட்சியம்மன்
துணை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கலியுகம்

நான்கு யுகங்களுள் கடைசியானது. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்பன மற்ற மூன்று யுகங்கள். இது மகாபாரதப் போரின் முடிவிலிருந்து தொடங்குகிறது என்பது செவிவழிச் செய்தி. கலியுகத் தொடக்கம் கி. மு. 1302ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18ம் நாள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது யுகம் 432,000 ஆண்டுகளைக் கொண்டது. இது உதிட்டிரன் யுகம் என்றும் பாரதயுகம் என்றும் கூறப்படும். இரண்டாம் புலிகேசியின் அய்கொளே கல்வெட்டில் கலியுகம் முதன் முதலாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கலியுகத்தை சப்தரிசி ஆண்டு போன்று வானூலார் உருவாக்கினர்.

சக ஆண்டு

இந்தியாவில் பண்டைக்காலத்தில் வழக்கிலிருந்த ஆண்டு, முறை, சக ஆண்டு கி. பி. 78இல் தொடங்குகிறது. தென்னிந்தியக் கல்வெட்டுக்களில், சக ஆண்டு முறையே குறிப்பிடப்பட்டுள்ளது. சக ஆண்டை முதன் முதலில் குறிப்பிட்டுள்ள கல்வெட்டு மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் புலிகேசியினுடைய அய்கொளேக் கல்வெட்டாகும். இதில் சக ஆண்டு 465 (கி. பி. 542) எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், இலக்கிய வழக்கில் இவ்வாண்டு முறை சக 380 (கி. பி. 470) என உலோக விபாகம் என்னும் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலை தமிழகத்துத் திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்த சமண முனிவரான சிம்மசூரி என்பவர் எழுதினார்.

இந்த ஆண்டு முறையை நிறுவிய மன்னன் யார் என்பது பற்றியப் பற்பல கருத்துகள் நிலவுகின்றன. இதனைத் தோற்றுவித்தவன் சககுலத்தைச் சார்ந்த நாகபானன் என டாக்டர் பிளிட்டும் (Fleet). சாத்தனன் எனத் துப்ரேயும் (Doubriel). கனிசுகன் என இராப்சனும் (Repson)

கருதுகின்றனர். இராப்சனின் கருத்தே இன்று பல அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளது. சக ஆண்டு சைத்திர திங்கள் 1ம் தேதி தொடங்குகிறது. சக ஆண்டு முறையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு விழாக்கள் பலவற்றைச் சக ஆண்டு நாள்களில் கொண்டாடுகிறது.

கொல்லம் ஆண்டு

கொல்லம் கேரள மாநிலத்தின் மேற்குக் கடற் கரையில் அமைந்துள்ள பழமை மிக்க துறைமுகப் பட்டினம். கொல்லம் (Quilon) மாவட்டம் என்னும் தனி மாவட்டமும் உள்ளது. இப்பட்டினம் மதுரைக்குத் தென் மேற்கே ஏறத்தாழ 200 கி. மீ. தொலைவில் உள்ளது. இது ஆலப்புழை நகரோடு கழிமுகக் கால்வாயால் இணைக்கப்பட்டுள்ளது. ஆலப்புழை கொல்லத்திலிருந்து 78 கி.மீ. தொலைவில் உள்ளது. கப்பல்கள் கடலில் கடற்கரையிலிருந்து 6 கி. மீ. அப்பால் தங்கும். அங்கிருந்து கரையோரம் வரை இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தேங்காய் எண்ணெய்க்குப் புகழ்பெற்றது கொல்லம்.

மலையாள மொழி பேசும் கேரளப் பகுதியில் வழக்கிலிருந்த ஆண்டு கொல்லம் ஆண்டு. திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுகளில் இவ்வாண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. வீர இரவிவர்மன் என்ற அரசரின் திருவனந்தபுரம் கல்வெட்டுகளில் கொல்லம் ஆண்டு 776 என உள்ளது. சுவாமிக்கண்ணுப்பிள்ளை கொல்லமாண்டின் தொடக்கம் கி.பி. 824-825 எனக் கணக்கிட்டுள்ளார். கொல்லமாண்டு தோற்றுவிக்கப் பட்டதின் நோக்கம் தெரியவில்லை. கேரளத்தில் உள்ள கொல்லம் நகரை நிருமாணித்த ஆண்டிலிருந்து இவ்வாண்டு தொடங்குகிறது எனச் சிலர் கூறுகின்றனர். கொல்லம் நகரம் கி. பி. 824-825ற்கு முன்பே இருந்துள்ளது. இந்நகரத்தை இவ்வாண்டில் சீர்திருத்தி அமைத்திருக்க வாய்ப்புள்ளது.

கேரளாவை கி. பி. 9ஆம் நூற்றாண்டில் இசுலாமியர் தாக்கினர். சில நாட்கள் கழித்து இப்பகுதிகள் சுதந்திரம் பெற்றன. அதன் நினைவாகக் கொல்லமாண்டு ஏற்பட்டது எனவும் சிலர் கருதுகின்றனர்.

ஆண்டுக்கணக்கிடல்

கூட்டல்

(உத்தேசமாக)

சாலிவாகன (சகம்) ஆண்டுடன் 78 கூட்ட ஆங்கில ஆண்டு வரும்.

சாலிவாகன ஆண்டு	1935 + 78 =	2013
பசலி	1423 + 590 =	2013
கொல்லம்	1189 + 824 =	2013
ஹிஜ்ரி	1434 + 579 =	2013
போஜ ஆண்டு	1983 + 50 =	2013
ஸ்ரீஇராமனுஜர் ஆண்டு	1002 + 1011 =	2013
ராமதேவ் ஆண்டு	1957 + 56 =	2013
கிருஷ்ணராய ஆண்டு	1763 + 491 =	2013
பிரதாப ருத்ச ஆண்டு	1522 + 491 =	2013

கழித்தல்

கலியப்தம்	5114 -3101 =2013
விக்கிரம	2070-57 = 2013

யுகங்கள்

கிரேதாயுகம்	4800X360= 17,28,000	மனுஷ்ய வருடங்கள்
திரேதாயுகம்	3600X360=12,96,000	,, ,,
துவாபரயுகம்	2400X360=8,64,000	,, ,,
கலியுகம்	1200X360=4,32,000	,, ,,
கூடுதல்	43, 20,000	

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்கள் பாடிய ஆழ்வார்களில் குறிப்பிடத்தக்கவர் திருமங்கை ஆழ்வார் ஆவார். இவர் அருளிய பெரியதிருமொழியின் ஏழாம் பத்து-ஏழாம் திருமொழியில் 6ஆம் பாடல் நான்கு யுகங்கள் பற்றி குறிப்பிடுகின்றது. அப்பாடல்,

தோயா இன் தயிர் நெய் அமுது உண்ண
சொன்னார் சொல்லி நகும் பரிசே பெற்ற
தாயால் ஆப்புண்டு இருந்து, அழுது ஏங்கும்
தாடாளா தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய் கிரேத, திரேத, துவாபர,
கலியுகம் இவை நான்கும் முன் ஆனாய்
ஆயா நின்அடி அன்றி மற்று அறியேன்
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே.

இதுவாகும்.

இதன் பொருள் எதையும் வாய்க்கு வந்தபடி பேசுவோர் வசைகூறி சிரிக்கும்படியாக, தோயாத இனிய தயிரையும், நெய்யையும் அமுது செய்ய தாயாகிய யசோதையினால் கட்டுண்டிருந்து விம்மியழுத பெரியோனே. பூமியில் உள்ளவர்களுக்கும், விண்ணுலகத்தில் உள்ளவர்களுக்கும் கிட்டக்கூடாதவனே, முன்னமே கிருத, திரேத, துவாபர, கலியுகம் என்னும் இந்த நான்கு யுகங்களுக்கும் தலைவனே, கோபாலகிருஷ்ணனே, அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே, நின் அடியின்றி மற்று அறியேன் என்பதாகும்.

பட்சங்கள் - 2

பிரதமை முதல் பௌர்ணமி முடிய சுக்லபட்சம் (வளர்பிறை)

பிரதமை முதல் அமாவாசை முடிய கிருஷ்ண பட்சம் (தேய்பிறை)

அயனங்கள்-2

தை முதல் ஆனி முடிய உத்தராயணம்

ஆடி முதல் மார்கழி முடிய தட்சிணாயணம்

கருவறையில் ப்ரதிஷ்டை செய்யும்பொழுது மேற்படி காலங்களைக் கணித்து கோயில், அரண்மனைகள் எழுப்பியுள்ளனர்.

திதிகள் - 15

ப்ரதமை	நவமி
த்விதீயை	தசமி
த்ருதீயை	ஏகாதசி
சதுர்த்தி	த்வாதசி
பஞ்சமி	த்ரயோதசி
ஷஷ்டி	சதுர்தசி
ஸப்தமி	பௌர்ணமி(அ)
அஷ்டமி	அமாவாசை

வாரங்கள் (கிழமைகள்) - 7

ஞாயிறு	வியாழன்
திங்கள்	வெள்ளி
செவ்வாய்	சனி
புதன்	

நட்சத்திரங்கள் - 27

அச்வினி	பூசம்	ஸ்வாதி	திருஓணம்
பரணி	ஆயில்யம்	விசாகம்	அவிட்டம்
கிருத்திகை	மகம்	அனுஷம்	சதயம்
ரோகிணி	பூரம்	கேட்டை	பூரட்டாதி
மிருகசீர்ஷம்	உத்தரம்	மூலம்	உத்தரட்டாதி
திருவாதிரை	ஹஸ்தம்	பூராடம்	ரேவதி
புனர்பூசம்	சித்திரை	உத்திராடம்	

ராசிகள், லக்கினங்கள் - 12

மேஷம்	கடகம்	துலாம்	மகரம்
ரிஷபம்	ஸிம்ஹம்	விருச்சிகம்	கும்பம்
மிதுனம்	கன்னி	தனுஸ்	மீனம்

12 லக்கினங்களின் நாழிகை

	நா.	வி.		நா.	வி.
மேஷம்	4	15	துலாம்	5	0
ரிஷபம்	4	45	விருச்சிகம்	5	15
மிதுனம் 5	15		தனுஷ்	5	30
கடகம்	5	30	மகரம்	5	15
சிம்மம்	5	15	கும்பம்	4	15
கன்னி	5	0	மீனம்	4	15

ஆக 60 நாழிகை

யோகங்கள் - 27

விஷ்கம்பம்	த்ருதி	வஜ்ரம்	ஸாத்யம்
ப்ரீதி	சூலம்	சித்தி	சுபம்
ஆயுஷ்மான்	கண்டம்	வ்யதீபாதம்	சுப்ரம்
சௌபாக்யம்	வ்ருத்தி	வரீயான்	பராம்மம்
சோபனம்	த்ருவம்	பரிகம்	மாஹேந்த்ரம்
அதிகண்டம்	வ்யாகாதம்	சிவம்	வைத்ருதி
ஸுகர்மம்	ஹர்ஷணம்	சித்தம்	

எண்ணும்-8

கரணங்கள் – 11

சரம்–7		ஸ்திரம்–4	
பவம்	கரஜை	சகுனி	நாகவம்
பாலவம்	வணிஜை	சதுஷ்பாதம்	கிம்ஸ்துக்னம்
கௌலவம்	பத்ரம்		
தைதுலம்			

மாதங்கள் – 12

தமிழ்	ஸௌரமானம்	சாந்த்ரமானம்
சித்திரை	மேஷம்	சைத்ரம்
வைகாசி	ரிஷபம்	வைசாகம்
ஆனி	மிதுனம்	ஜ்யேஷ்டம்
ஆடி	கடகம்	ஆஷாடம்
ஆவணி	சிம்மம்	ச்ராவணம்
புரட்டாசி	கன்னி	பாத்ரபதம்
ஐப்பசி	துலாம்	ஆச்வினம்
கார்த்திகை	விருச்சிகம்	கார்த்திகம்
மார்கழி	தனுஸ்	மார்க்கசிரம்
தை	மகரம்	பௌஷம்
மாசி	கும்பம்	மாகம்
பங்குனி	மீனம்	பால்குனம்

வருடங்கள் – 60

பிரபவ	சித்திரபானு	ஹேவிளம்பி	பரிதாபி
விபவ	சுபானு	விளம்பி	ப்ரமாதீச
சுக்ல	தாரண	விகாரி	ஆனந்த
ப்ரமோதூத	பார்திப	சார்வரி	ராக்ஷஸ
ப்ரஜோத்பத்தி	விய	ப்லவ	நள
ஆங்கீரஸ	ஸர்வஜித்	சுபகிருத்	பிங்கள
ஸ்ரீமுக	ஸர்வதாரி	சோபகிருத்	காளயுத்தி
பவ	விரோதி	க்ரோதி	ஸித்தார்த்தி
யுவ	விக்ருதி	விச்வாஸு	ரௌத்ரி
தூது(தாத்ரு)	கர	பராபவ	துன்மதி
ஈச்வர	நந்தன	ப்லவங்க	துந்துபி
வெகுதான்ய	விஜய	கீலக	ருத்ரோத்காரி
ப்ரமாதி	ஜய	ஸௌம்ய	ரக்தாக்ஷி
விக்ரம	மன்மத	ஸாதாரண	க்ரோதன
விஷு	துர்முகி	விரோதிக்ருத்	அக்ஷய

வ. எண்	தமிழ் ஆண்டு	ஆங்கிலஆண்டு		ஆங்கில ஆண்டு		ஆங்கில ஆண்டு		ஆங்கில ஆண்டு	
1	பிரபவ	1807 -	1808	1867 -	1868	1927 -	1928	1987 -	1988
2	விபவ	1808 -	1809	1868 -	1869	1928 -	1929	1988 -	1989
3	சுக்கல	1809 -	1810	1869 -	1870	1929 -	1930	1989 -	1990
4	பிரமோதூத	1810 -	1811	1870 -	1871	1930 -	1931	1990 -	1991
5	பிரஜோத்பத்தி	1811 -	1812	1871 -	1872	1931 -	1932	1991 -	1992
6	ஆங்கிரஸ	1812 -	1813	1872 -	1873	1932 -	1933	1992 -	1993
7	ஸ்ரீமுக	1813 -	1814	1873 -	1874	1933 -	1934	1993 -	1994
8	பவ	1814 -	1815	1874 -	1875	1934 -	1935	1994 -	1995
9	யுவ	1815 -	1816	1875 -	1876	1935 -	1936	1995 -	1996
10	தாது	1816 -	1817	1876 -	1877	1936 -	1937	1996 -	1997
11	ஈஸ்வர	1817 -	1818	1877 -	1878	1937 -	1938	1997 -	1998
12	வெகுதான்ய	1818 -	1819	1878 -	1879	1938 -	1939	1998 -	1999
13	பிரமாதி	1819 -	1820	1879 -	1880	1939 -	1940	1999 -	2000
14	விக்கிரம	1820 -	1821	1880 -	1881	1940 -	1941	2000 -	2001
15	விஷு	1821 -	1822	1881 -	1882	1941 -	1942	2001 -	2002
16	சித்ரபானு	1822 -	1823	1882 -	1883	1942 -	1943	2002 -	2003
17	சுபானு	1823 -	1824	1883 -	1884	1943 -	1944	2003 -	2004
18	தாரண	1824 -	1825	1884 -	1885	1944 -	1945	2004 -	2005
19	பார்த்திப	1825 -	1826	1885 -	1886	1945 -	1946	2005 -	2006
20	விய	1826 -	1827	1886 -	1887	1946 -	1947	2006 -	2007

21	ஸர்வஜித்து	1827 -	1828	1887 -	1888	1947 -	1948	2007 -	2008
22	சர்வதாரி	1828 -	1829	1888 -	1889	1948 -	1949	2008 -	2009
23	விரோதி	1829 -	1830	1889 -	1890	1949 -	1950	2009 -	2010
24	விக்ருதி	1830 -	1831	1890 -	1891	1950 -	1951	2010 -	2011
25	கர	1831 -	1832	1891 -	1892	1951 -	1952	2011 -	2012
26	நந்தன	1832 -	1833	1892 -	1893	1952 -	1953	2012 -	2013
27	விஜய	1833 -	1834	1893 -	1894	1953 -	1954	2013 -	2014
28	ஜய	1834 -	1835	1894 -	1895	1954 -	1955	2014 -	2015
29	மன்மத	1835 -	1836	1895 -	1896	1955 -	1956	2015 -	2016
30	துர்முகி	1836 -	1837	1896 -	1897	1956 -	1957	2016 -	2017
31	ஏவிளம்பி	1837 -	1838	1897 -	1898	1957 -	1958	2017 -	2018
32	விளம்பி	1838 -	1839	1898 -	1899	1958 -	1959		
33	விகாரி	1839 -	1840	1899 -	1900	1959 -	1960		
34	சார்வரி	1840 -	1841	1900 -	1901	1960 -	1961		
35	பிலவ	1841 -	1842	1901 -	1902	1961 -	1962		
36	சுபகிருது	1842 -	1843	1902 -	1903	1962 -	1963		
37	சோபகிருது	1843 -	1844	1903 -	1904	1963 -	1964		
38	குரோதி	1844 -	1845	1904 -	1905	1964 -	1965		
39	விசுவாவசு	1845 -	1846	1905 -	1906	1965 -	1966		
40	பராபவ	1846 -	1847	1906 -	1907	1966 -	1967		

41	பிலவங்க	1847 -	1848	1907 -	1908	1967 -	1968		
42	கீலக	1848 -	1849	1908 -	1909	1968 -	1969		
43	சௌமிய	1849 -	1850	1909 -	1910	1969 -	1970		
44	சாதாரண	1850 -	1851	1910 -	1911	1970 -	1971		
45	விரோதிகிருது	1851 -	1852	1911 -	1912	1971 -	1972		
46	பரிதாபி	1852 -	1853	1912 -	1913	1972 -	1973		
47	பிரமாதீச	1853 -	1854	1913 -	1914	1973 -	1974		
48	ஆனந்த	1854 -	1855	1914 -	1915	1974 -	1975		
49	ராக்ஷஸ	1855 -	1856	1915 -	1916	1975 -	1976		
50	நள	1856 -	1857	1916 -	1917	1976 -	1977		
51	பிங்கள	1857 -	1858	1917 -	1918	1977 -	1978		
52	காளயுக்தி	1858 -	1859	1918 -	1919	1978 -	1979		
53	சித்தார்த்தி	1859 -	1860	1919 -	1920	1979 -	1980		
54	ரௌத்திரி	1860 -	1861	1920 -	1921	1980 -	1981		
55	துன்மதி	1861 -	1862	1921 -	1922	1981 -	1982		
56	துந்துபி	1862 -	1863	1922 -	1923	1982 -	1983		
57	ருத்ரோத்காரி	1863 -	1864	1923 -	1924	1983 -	1984		
58	ரக்தாக்ஷி	1864 -	1865	1924 -	1925	1984 -	1985		
59	குரோதன	1865 -	1866	1925 -	1926	1985 -	1986		
60	அக்ஷய	1866 -	1867	1926 -	1927	1986 -	1987		

கல்வெட்டுக்கள், சுவடிகளில் மட்டுமல்லாது மிகப்பழைமையான அச்சு நூல்களிலும் காணப்படும் ஆண்டுகளை கண்டறிவதற்கு இம்முறைகள் தெரிந்திருத்தல் அவசியம்

அதர்வ-வேதம்

அதர்வவேத சம்ஹிதையின் பரிபூரணத்
தமிழ் மொழிபெயர்ப்பு

இது
திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்களான
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் அவர்கள்
பொருள் உதவியைக்கொண்டு
பிரசுரிக்கப்பட்டது.

கிருஷ்ண சுக்கில யஜுர்வேதம், சாமவேதம், வேத சந்திரிகை
உபநிஷதக் கதைகள், யோகாசனம், தமிழ் சத்தியார்த்தப்
பிரகாசம், மாஜினியும் மனிதர் கடமைகளும்
முதலிய நூல்களை இயற்றிய
வேதோபநிஷத ஆசிரியர்
எம். ஆர். ஜம்புநாதன்
எழுதியது

ஜம்புநாதன் புஸ்தகசாலை
சென்னை
பிரமாதி௵ தைமீ

காபிரைட் ரிஜிஸ்டர்டு] [விலை ரூ 5

கி. பி. 1940

அநாதிநம.

தேம்பாவணி

யிரண்டாங்காண்டம்.

வீரமாமுனிவர்

அருளிச்செய்த

இக்காப்பியம்

அவரது கையெழுத்துப்பிரதிக்கொப்பப்
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகாகனம்பொருந்தியஆண்டவரும்
அப்போஸ்தொலிக்குவிக்காரியுமாகிய
இளெமென்சுபொனந்
துரிசிப்பாளென்னும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்கள் அனுமதியில்
உரோமாபுரியினின்று வந்த
உத்தாரத்தின்படியே

௲௮௱௫௰௨ம். வருஷ
புதுவையிற் சன்மனசிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

கி. பி. 1852ஆம் ஆண்டு

தொல்காப்பியம். சீர்காழி.

இஃது

ஜமதக்கினிமஹாரிஷியின் புத்திரரும்,

அகஸ்திய மஹாரிஷியின் முதன் மாணாக்கரு

மாகியதிரணதூமாக்கினியென்னுமியற்பெயருடைய

தொல்காப்பியமகாரிஷியினால்

அருளிச்செய்யப்பட்டது.

இதில்

முதலாவது - எழுத்ததிகாரமூலமும்,

மதுரை ஆசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியரால்

அருளிச்செய்யப்பட்ட விருத்தியுரையும்,

காலிகிதங்களாலாய வழுக்களை நீக்கி யச்சிட்டுத் தருகவெனச் சில

வித்துவான்கள் கேட்டுக்கொள்ளக் கனம் பொருந்திய

கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற

சிட்டியென்னுஞ் சகல சாஸ்திர

சாலைத் தமிழ்த் தலைமைப்

புலமை நடாத்திய

மழவை

மகாலிங்கையரவர்களால்

பலபிரதிகளைக்கொண்டாராயப்பட்டுத்

திருவண்ணாமலை

வீரபத்திரையரால்

தமது-கல்விக்கடல் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

சாலிவாகன - ௵ - ௲௭௱௭௰ - சரியான பிலவங்க ௵ ஆவணி௴.

முதலில் சாலிவாகன ஆண்டு - 1770

இதில் 78ஐக் கூட்ட 78

ஆங்கில ஆண்டு கி.பி. 1848

உ

சிவமயம்.

விஸ்வகர்மாவாகிய

மயனென்பவர்

திருவாய்மலர்ந்தருளிய

சிற்பநூலென்னும்

மனையடிசாஸ்திரம்

இந்நூல் பலவாறாய்ச் சிதைந்திருந்தமையால்
சகலர்க்குமுபயோகமாகும்பொருட்டு
ராஜமகேந்திரம் ஜில்லாகாகரபர்த்தி [illegible]

இராமகிருஷ்ணசித்தாந்தியார்.

சுகர்நாடி ஜோதிஷர்.

ஐயாசாமிபிள்ளையவர்கள்

இவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

சனற்குமாரவாக்கு கடைசவாக்கு [illegible]
உள்ளமுடையான் காலம் [illegible] முதலிய
[illegible]
கோர்வையாக்கிமுன்னர் அச்சிட்டபிரதிக்கிணங்க

திரிசிரபுரம்

புஸ்தகவியாபாரம்

இ. சபாபதிபிள்ளை

அவர்களாற்றமது
ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

[illegible]

கி. பி. 1885ஆம் ஆண்டு

எண்ணும்-9

உ

திருச்சிற்றம்பலம்.

சிறுத்தொண்டநாயனார்

சரித்திரகீர்த்தனை.

திருவவ்வுளூர்

வேங்கடாசலசெட்டியாரவர்கள்

குமாரர்

இராமசாமிசெட்டியார்

ஞானமாக இயற்றியது

இஃது

புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார்

முன்னிலையில் பரிசோதித்து

ஒட்டலிங்கம்

சோமசுந்தரசெட்டியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

கா. தம்பிரான் ஆசாரி அவர்களால்

இராகதாளங்கள் அமைவித்து

ஷை இராமசாமிசெட்டியார்

குமாரர்

தி. பாலசுந்தரசெட்டியாரால்

சென்னை,

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகன சகாப்தம் ௲௮௱௫-ல் நிகழும்

சித்திரபானு௵ மேஷ ரவி

Registered copy right.

முதலில் சாலிவாகன ஆண்டு - 1805

இதில் 78ஐக் கூட்ட 78

ஆங்கில ஆண்டு கி.பி. 1883

திருநாவுக்கரசர் தேவாரம்

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

கீழ்க்கணக்கு	பின்னவெண்கள்	
ஜ	முக்கால்	$\frac{3}{4}$
உ	அரை	$\frac{1}{2}$
வ	கால்	$\frac{1}{4}$
ஸ	நாலுமா	$\frac{1}{5}$
ஙீ	மும்மாமுக்காணி அல்லது மூன்றுவீசம்	$\frac{3}{16}$
ங	மும்மா	$\frac{3}{20}$
ஹ	அரைக்கால்	$\frac{1}{8}$
ஐ	இருமா	$\frac{1}{10}$
பஐ	மாகாணி அல்லது வீசம்	$\frac{1}{16}$
ப	ஒருமா	$\frac{1}{20}$
ஜு	முக்காணி	$\frac{3}{80}$
ஸு	அரைமா	$\frac{1}{40}$
ஐ	காணி	$\frac{1}{80}$
ஏ	அரைக்காணி	$\frac{1}{160}$

வ்த	முந்திரி	$\frac{1}{320}$
[illegible]	கீழ்முக்கால்	$\frac{3}{1,280}$
கீ உ	கீழரை	$\frac{1}{640}$
கீ வ்	கீழ்க்கால்	$\frac{1}{1,280}$
கீ ல	கீழ்நாலுமா	$\frac{1}{1,600}$
கீ ஸ	கீழ்மூன்றுவீசம்	$\frac{3}{5,020}$
கீ ங	கீழ்மும்மா	$\frac{3}{6,400}$
கீ ஷு	கீழரைக்கால்	$\frac{1}{2,560}$
கீ ஐ	கீழிருமா	$\frac{1}{3,020}$
கீ பஐ	கீழ்வீசம்	$\frac{1}{5,002}$
கீ ப	கீழொருமா	$\frac{1}{6,400}$
கீ ந	கீழ்முக்காணி	$\frac{3}{25,600}$
கீ சு	கீழரைமா	$\frac{1}{12,800}$
கீ ஐ	கீழ்க்காணி	$\frac{1}{25,600}$
கீ ர	கீழரைக்காணி	$\frac{1}{51,200}$
கீ வ்த	கீழ்முந்திரி	$\frac{1}{1,02,400}$
	இம்மி	$\frac{1}{10,75,200}$
	அதிசாரம்	$\frac{1}{18,38,400}$

3. மேலலகெழுத்து

(ஒன்றிற்கும் மேற்பட்ட முழுவெண்ணெழுத்துகள்)

ஏகம்	-	ஒன்று	-	1	-	௧
தசம்	-	பத்து	-	10	-	௰
சதம்	-	நூறு	-	100	-	௱
சகசிரம்	-	ஆயிரம்	-	1000	-	௲
அயுதம்	-	பத்தாயிரம்	-	10,000	-	௰௲
நியுதம்	-	நூறாயிரம் (இலட்சம்)	-	1,00,000	-	௱௲
பிரயுதம்	-	பத்து நூறாயிரம் (ஆயிரமாயிரம், பத்துலட்சம்)	-	10,00,000	-	௰௱௲, ௲௲
கோடி	-	நூறுநூறாயிரம்	-	1,00,00,000	-	௱௱௲
அற்புதம்	-	பத்து நூறுநூறாயிரம் (பத்துகோடி)	-	10,00,00,000	-	௰௱௱௲
நிகற்புதம்	-	நூறுகோடி	-	1,00,00,00,000		
கும்பம்	-	ஆயிரங்கோடி	-	10,00,00,00,000		
கணம்	-	பத்தாயிரங்கோடி	-	1,00,00,00,00,000		
கற்பம்	-	நூறாயிரங்கோடி	-	10,00,00,00,00,000		
நிகற்பம்	-	ஆயிரமாயிரங்கோடி	-	1,00,00,00,00,00,000		
பதுமம்	-	கோடிக்கோடி (இருகோடி)	-	10,00,00,00,00,00,000		
சங்கம்	-	பத்து கோடிக்கோடி	-	1,00,00,00,00,00,00,000		
வெள்ளம் (சமுத்திரம்)	-	நூறு கோடிக்கோடி	-	10,00,00,00,00,00,00,000		
அந்நியம்	-	ஆயிரம் கோடிக்கோடி	-	1,00,00,00,00,00,00,00,000		
மத்தியம் (அர்த்தம்)	-	பத்தாயிரம் கோடிக்கோடி	-	10,00,00,00,00,00,00,00,000		
பரார்த்தம்	-	நூறாயிரம் கோடிக்கோடி	-	1,00,00,00,00,00,00,00,00,000		
பூரியம்	-	ஆயிரமாயிரங்கோடிக்கோடி	-	10,00,00,00,00,00,00,00,00,000		
பிரமகற்பம்	-	முக்கோடி	-	1,00,00,00,00,00,00,00,00,00,000		

எண்ணல் அளவு

ஒன்று		க	1
இரண்டு		உ	2
மூன்று		ங	3
நான்கு		ச	4
ஐந்து		ரு	5
ஆறு		சு	6
ஏழு		எ	7
எட்டு		அ	8
ஒன்பது		கூ	9
பத்து	(ய)	க0	10
பதினொன்று	(யக)	கக	11
பன்னிரண்டு	(யஉ)	கஉ	12
பதின்மூன்று	(யங)	கங	13
பதின்நான்கு	(யச)	கச	14
பதினைந்து	(யரு)	கரு	15
பதினாறு	(யசு)	கசு	16
பதினேழு	(யஎ)	கஎ	17
பதினெட்டு	(யஅ)	கஅ	18
பத்தொன்பது	(யகூ)	ககூ	19
இருபது	(உய)	உ0	20
இருபத்தொன்று	(உயக)	உக	21
இருபத்திரண்டு	(உயஉ)	உஉ	22
இருபத்து மூன்று	(உயங)	உங	23
இருபத்து நான்கு	(உயச)	உச	24
இருபத்தைந்து	(உயரு)	உரு	25
இருபத்தாறு	(உயசு)	உசு	26
இருபத்தேழு	(உயஎ)	உஎ	27
இருபத்தெட்டு	(உயஅ)	உஅ	28
இருபத்தொன்பது	(உயகூ)	உகூ	29
முப்பது	(ஙய)	ங0	30

நாற்பது	(சய)	ச0	40
ஐம்பது	(ருய)	ரு0	50
அறுபது	(சூய)	சூ0	60
எழுபது	(எய)	எ0	70
எண்பது	(அய)	அ0	80
தொண்ணூறு	(கூய)	கூ0	90
நூறு	(ள)	க00	100
நூற்றுப் பத்து	(ளய)	கக0	110
நூற்று இருபது	(ளஉய)	கஉ0	120
நூற்று முப்பது	(ளஙய)	கங0	130
நூற்று நாற்பது	(ளசய)	கச0	140
நூற்று ஐம்பது	(ளருய)	கரு0	150
நூற்று அறுபது	(ளசூய)	கசூ0	160
நூற்று எழுபது	(ள.எய)	கஎ0	170
நூற்று எண்பது	(ளஅய)	கஅ0	180
நூற்றுத்தொண்ணூறு	(ளகூய)	ககூ0	190
இருநூறு	(உள)	உ00	200
முந்நூறு	(ஙள)	ங00	300
நானூறு	(சள)	ச00	400
ஐந்நூறு	(ருள)	ரு00	500
அறுநூறு	(சூள)	சூ00	600
எழுநூறு	(எள)	எ00	700
எண்ணூறு	(அள)	அ00	800
தொள்ளாயிரம்	(கூள)	கூ00	900
ஆயிரம்	(தூ)	க,000	1000
இரண்டாயிரம்	(உதூ)	உ,000	2000
மூவாயிரம்	(ஙதூ)	ங,000	3000
நான்காயிரம்	(சதூ)	ச,000	4000
ஐயாயிரம்	(ருதூ)	ரு,000	5000
ஆறாயிரம்	(சூதூ)	சூ,000	6000
ஏழாயிரம்	(எதூ)	எ,000	7000
எண்ணாயிரம்	(அதூ)	அ,000	8000

ஒன்பதாயிரம்	(௯௲) ௯,000	9000
பதினாயிரம்	(௰௲) ௧0,000	10,000
நூறாயிரம் (௱௲) (இலக்கம்)	௧00,000	100,000
பத்து நூறாயிரம் (௰௱௲) (பத்திலக்கம்)	௧0,00,000	10,00,000
நூறு நூறாயிரம் (௱௱௲) (கோடி)	௧,00,00,000	1,00,00,000

பெய்தல் அளவு

360	நெல்	—	*1*	செவிடு
5	செவிடு	—	*1*	ஆழாக்கு
2	ஆழாக்கு	—	*1*	உழக்கு
2	உழக்கு	—	*1*	உரி
2	உரி	—	*1*	படி
8	படி	—	*1*	மரக்கால் (குறுணி)
2	குறுணி	—	*1*	பதக்கு
2	பதக்கு	—	*1*	தூணி
5	மரக்கால்	—	*1*	பறை
80	பறை	—	*1*	கரிசை
48-96	படி	—	*1*	கலம்
120	படி	—	*1*	பொதி

ஒரு படிக்கு

அவரை	—	1,800
மிளகு	—	12,800
நெல்	—	14,400
பயறு	—	14,800
அரிசி	—	38;000
எள்	—	1,15,200

நீட்டல் அளவு



10	கோண்	—	1	நுண்ணணு
10	நுண்ணணு	—	1	அணு
8	அணு	—	1	கதிர்த்துகள்
8	கதிர்த்துகள்	—	1	துசும்பு
8	துசும்பு	—	1	மயிர்நுனி
8	மயிர்நுனி	—	1	நுண்மணல்
8	நுண்மணல்	—	1	சிறு கடுகு
8	சிறு கடுகு	—	1	எள்
8	எள்	—	1	நெல்.
8	நெல்	—	1	விரல்
12	விரல்	—	1	சாண்
2	சாண்	—	1	முழம்
4	முழம்	—	1	பாகம்
6000	யாகம்	—	1	காதம் (12,00கஜம்)
4	காதம்	—	1	யோசனை

தெறிப்பளவு

2	கண்ணிமை	—	1	நொடி
2	கைநொடி	—	1	மாத்திரை
2	மாத்திரை	—	1	குரு
2	குரு	—	1	உயிர்
2	உயிர்	—	1	சணிகம்
12	சணிகம்	—	1	விநாடி.
60	விநாடி	—	1	விநாடி-நாழிகை
$2\frac{1}{2}$	நாழிகை	—	1	ஓரை
$3\frac{3}{4}$	நாழிகை	—	1	முகூர்த்தம்
2	முகூர்த்தம்	—	1	சாமம்
4	சாமம்	—	1	பொழுது
2	பொழுது	—	1	நாள்
15	நாள்	—	1	பக்கம்
2	பக்கம் / 30நாள்	—	1	மாதம்
6	மாதம்	—	1	அயனம்
2	அயனம்	—	1	ஆண்டு
60	ஆண்டு	—	1	வ்ட்டம்

நிறுத்தல் அளவு



பொன் நிறுத்தல்

4	நெல்எடை	—	1	குன்றிமணி
2	குன்றிமணி	—	1	மஞ்சாடி
2	மஞ்சாடி	—	1	பணவெடை
5	பணவெடை	—	1	கழஞ்சு
8	பணவெடை	—	1	வராகனெடை
4	கழஞ்சு	—	1	கஃசு
4	கஃசு	—	1	பலம்

பண்டங்கள் நிறுத்தல்

32	குன்றிமணி	—	1	வராகனெடை
10	வராகனெடை	—	1	பலம்
40	பலம்	—	1	வீசை
100	பலம்	—	1	கா
6	வீசை	—	1	துலாம்
8	வீசை	—	1	மணங்கு
20	மணங்கு	—	1	பாரம்

முகத்தல் அளவு

5	செவிடு	—	1	ஆழாக்கு
2	ஆழாக்கு	—	1	உழக்கு
2	உழக்கு	—	1	உரி
2	உரி	—	1	படி
8	படி	—	1	மரக்கால்
2	குறுணி	—	1	பதக்கு
2	பதக்கு	—	1	தூணி


நூற்றாண்டு தோறும் தமிழ் எண்களின் வரிவடிவ வளர்ச்சி
இந்தோ - அரேபிய எண்கள்
கி.பி.2ஆம் நூ-டு
கி.பி.3 ஆம் நூ-டு
கி.பி.4ஆம் நூ-டு
கி.பி.10 ஆம் நூ-டு
கி.பி.11 ஆம் நூ-டு
கி.பி.13ஆம் நூ-டு
கி.பி.15ஆம் நூ-டு
கி.பி.18ஆம் நூ-டு
கி.பி.20ஆம் நூ-டு
1 / 16
1 / 8
1 / 4
1 / 2
3 / 4
1
2
3
4
5
6
7
8
9
10
100
1000

தமிழ் எண்களின் மாற்றம்
(தமிழ் → அரபு/மேலைநாடு)
௦ → 0
௧ → 1
௨ → 2
௩ → 3
௪ → 4
௫ → 5
௬ → 6
௭ → 7
௮ → 8
௯ → 9
௰ → 10

குறிப்பெழுத்து (சொற்குறியீடு)

அமுது	–	[illegible]
அரிசி	–	[illegible]
ஆக	–	[illegible]
எள்ளு	–	[illegible]
காசு	–	[illegible]
குழி	–	[illegible]
கேழ்வரகு	–	[illegible]
கோட்டை	–	[illegible]
சங்கிலி	–	[illegible]
சம்பா	–	[illegible]
சிரஞ்சீவி	–	[illegible]
சோடு	–	[illegible]
தடி	–	[illegible]
தானியம்	–	[illegible]
துவரை	–	[illegible]
தூக்கம்	–	[illegible]
தெற்கு	–	[illegible]
தேதி	–	[illegible]
நஞ்சை	–	[illegible]
நம்பர்	–	[illegible]
நயினார்	–	[illegible]
நல்லெண்ணை	–	[illegible]
நவரை	–	[illegible]
நன்செய்	–	[illegible]
நாயக்கர்	–	[illegible]
நாளது	–	[illegible]
நிலம்	–	[illegible]
நிலுவை	–	[illegible]
நெல்	–	[illegible]
பணம்	–	[illegible]
படி	–	[illegible]
பலம்	–	[illegible]
பிள்ளை	–	[illegible]
புஞ்சை	–	[illegible]
புன்செய்	–	[illegible]
பூஞ்ஞியம்	–	[illegible]
பொன்	–	[illegible]
மகசூல்	–	[illegible]
மாதம்	–	[illegible]
மீதம்	–	[illegible]
மிளகு	–	[illegible]
முதலி	–	[illegible]
முதல்	–	[illegible]
மேற்படி	–	[illegible]
வடக்கு	–	[illegible]
வரகு	–	[illegible]
வருடம்	–	[illegible]
வாரம்	–	[illegible]
விராகனெடை	–	[illegible]

கூட்டெழுத்து

அம்	–	[illegible]
கம்	–	[illegible]
கீழ்	–	[illegible]
கூடி	–	[illegible]
க்க	–	[illegible]
க்கி	–	[illegible]
க்கு	–	[illegible]
க்கை	–	[illegible]
ச்சு	–	[illegible]
ட்ட	–	[illegible]
ட்டி	–	[illegible]
ட்டு	–	[illegible]
ணம்	–	[illegible]
ண்ட	–	[illegible]
தும்	–	[illegible]
த்த	–	[illegible]
த்தி	–	[illegible]
த்து	–	[illegible]
ந்த	–	[illegible]
ந்திரு	–	[illegible]
ந்து	–	[illegible]
பட	–	[illegible]
படி	–	[illegible]
ப்ப	–	[illegible]
ப்பா	–	[illegible]
மும்	–	[illegible]
யும்	–	[illegible]
ராம	–	[illegible]
வும்	–	[illegible]
ளம்	–	[illegible]
ளும்	–	[illegible]
ற்றி	–	[illegible]
ணம்	–	[illegible]
னும்	–	[illegible]

கூட்டெழுத்து

ஆண்டிகுளம்	ஆாடிகுளம	பட்டவிருத்தி	படட விருதி
க்கருப்பன்	கருபபன	பத்திரம்	பதிரம
கல்வாசனாட்டில்	கல்வாசனாடில்	பாத்தியம்	பாதியம
கைவளைந்து	கைவளாநது	பிரட்டாசி	பிரடாசி
கோட்டையூர்	கொடையூர	பேறுக்கு	பெறுகு
கொண்டபடி	கொணடபடி	பொண்டாட்டி	பொணடாடி
சக்கரைவட்டு	சகரைவடு	மிட்டா	மிடா
சத்திரம்	சதிரம	முத்து	முது
சித்தார்த்தி	சிதாரதி	முத்தயசெட்டி	முதயசெடி
செல்லப்பன்	செலபபன	யிரெட்டி	யிரெடி
தின்னைக்குடுக்கவும்	தினனைகுடுகவும	வந்து	வநது
தேவரெல்லாம்	தெவரெலாம	வறப்பட்ட	வறபட
நாலுதிக்குங்	நாலுதிகுங	வேண்டியது	வெணடியது
பட்டி	படடி		

சுருக்கெழுத்து

அத்தியாயம்	அதியாயு	புள்ளி	புளி
கிறயம்	கிறயு	மகன்	மகா
மாலையும்	மாலையு	பிள்ளை	பிளா
ராமய்யன்	ராயயன	அம்பலம்	அம
ஆக	ஆக	கவுண்டன்	கவுண
நிலவிலைக்கிறயபத்திரம்	நில விகிறயபதிரம		

எழுத்து மயக்கம்

அணிந்தார்	அணிநதார	கருணை	கருணை
அய்யன்	அயயன	குலை	குலை
அர்ச்சுனன்	அரசசுனன	கேட்டான்	கெடடான
அன்னேரம்	அனனெரம	சிரங்கள்	சிரஙகள
அன்று	அனறு	சிவகாமி	சிவகாமி
ஆடகமண்டப	ஆடகமணடப	சிறுபூளைமாலை	சிறுபூளைமாலை
ஆணை	ஆணை	சிறுவயிறு	சிறுவயிறு
ஆதித்தன்	ஆதிததன	சுப்பராயகவுண்டன்	சுபபராயகவுணடன
ஆதிதாளம்	ஆதிதாளம	சேர்ந்தார்	செரநதார
ஆர்வடமுத்து	ஆரவடமுதது	சேனை	செனை
ஆனால்	ஆனால	சேர்ராமலே	செரராமலெ
இச்சித்தேன்	இசசிததெனை	சேனை	செனை
இவர்	இவர	சோபகிருது	சொபகிருது
இனி	இனி	சொல்லுகுறார்	சொலலுகுறார
ஈட்டி	ஈடடி	சொர்ன்னகோபுரம்	சொரனனகொபுரம
ஈழம்	ஈழம	தம்பிறானை	தமபிறானை
உம்பர்	உமபர	தலையை	தலையை
உமிந்ததுவும்	உமிநததுவும	தீர்த்தம்	தீரததம
ஒரு	ஒரு	நறகம்	நறகம
ஓம்	ஓம	நற்றுணையாவது	நறறுணையாவது
கல்லன்	கலலன	நாடுறுப்பிர்	நாடுறுபபிர
நின்றாள்	நினறாள	நாவடியாக	நாவடியாக
நெல்லை	நெலலை	மோஷ்ச்சம்	மொஷசசம
படி	படி	யோசினை	யொசினை

பஞ்சவற்ன்னசேலை	[illegible]
தில்லை	[illegible]
பூசை	[illegible]
பெருங்கடலை	[illegible]
பேரிகை	[illegible]
மதிசூதனை	[illegible]
மலையரசன்	[illegible]
வண்னனை	[illegible]
வீரதண்டை	[illegible]
விளையாடு	[illegible]
வெண்பா	[illegible]
வேடனால்	[illegible]
வெத்திலையில்	[illegible]
வெளி	[illegible]
மாகாளி	[illegible]

கீழிலக்கம்

1 ஒன்று	க
1/4 கால்	[illegible]
1/2 அரை	[illegible]
3/4 முக்கால்	[illegible]
1/8 அரைக்கால்	[illegible]
1/16 வீசம் - மாகாணி	[illegible]
1/32 அரைவீசம்	[illegible]
1/64 கால்வீசம்	[illegible]
1/320 முந்திரி	[illegible]
1/160 அரைக்காணி	[illegible]
1/80 காணி	[illegible]
1/40 அரைமா	[illegible]
1/20 ஒருமா	[illegible]
2/20 இருமா	[illegible]
3/20 மும்மா	[illegible]
4/20 நாலுமா	[illegible]
5/20 ஐந்துமா - கால்	[illegible]
10/20 பத்துமா - அரை	[illegible]
15/20 பதினைந்துமா முக்கால்	[illegible]
20/20 இருபதுமா - வேலி-நிலம்	[illegible]

குறியீடுகள்





வருடம்	வசம்
வருடம்	சிலவு
வருடம்	ராம்
வருடம்	மாதம் ஒன்றுக்கு
மாதம்	வரவு
மாதம்	மாதம் ஒன்றுக்கு
மாதம்	வரவு
மாதம்	பற்று
தேதி	மூணுக்கு
தேதி	இதுவும்பற்று
தேதி	நாளதுதேதியில்
தேதி	முதல்
நிம்பர்	மேற்படி
நம்பர்	நாளது
க்கு பணம்	புஞ்சை
க்கு பணம்	குழி
யிந்தகிரல்	நிலம்



தமிழ்ச்சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் பழைமை யான காகித ஆவணங்கள் போன்றவைகளைப் படித்து அறிய வேண்டுமானால் அக்காலங்களில் தமிழ் எழுத்துக்களோடு பயின்றுவரும் அப்போது நடைமுறையில் இருந்த கிரந்த எழுத்துப் பயிற்சியும் தெரிந்திருத்தல் அவசியம். ஏனெனில் தமிழுடன் கிரந்தமும் கலந்து சொற்கள் அமைந்திருப்பதை காணமுடிகின்றது.

𑌸𑍍𑌵𑌰 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌿 = உயிரெழுத்துக்கள்

𑌅 அ अ A	𑌆 ஆ आ Ā	𑌇 இ इ I	𑌈 ஈ ई Ī
𑌉 உ उ U	𑌊 ஊ ऊ Ū	𑌋 ऋ Ṛ	𑍠 ॠ Ṝ
𑌌 ऌ Ḷ	𑍡 ॡ Ḹ	𑌏 ஏ ए E	𑌐 ஐ ऐ Ai
𑌓 ஒ ओ O	𑌔 ஔ औ Au	𑌅𑌂 அம் अं Am	𑌅𑌃 அஃ अः Ah

ஹல் அக்ஷராணி = உயிர்மெய்யெழுத்துகள்
(ஹல் அக்ஷராணி)

𑌕 க Ka क	𑌖 க$_2$ Kha ख	𑌗 க$_3$ Ga ग	𑌘 க$_4$ Gha घ	𑌙 ங Ṅ ङ
𑌚 ச Ca च	𑌛 ச$_2$ Cha छ	𑌜 ஜ Ja ज	𑌝 ஜ$_4$ Jha झ	𑌞 ஞ Ñ ञ
𑌟 ட Ṭa ट	𑌠 ட$_2$ Ṭha ठ	𑌡 ட$_3$ Ḍa ड	𑌢 ட$_4$ Ḍha ढ	𑌣 ண Ṇa ण
𑌤 த Ta त	𑌥 த$_2$ Tha थ	𑌦 த$_3$ Da द	𑌧 த$_4$ Dha ध	𑌨 ந Na न
𑌪 ப Pa प	𑌫 ப$_2$ Pha फ	𑌬 ப$_3$ Ba ब	𑌭 ப$_4$ Bha भ	𑌮 ம Ma म
𑌯 ய Ya य	𑌰 ர Ra र	𑌲 ல La ल	𑌵 வ Va व	𑌶 ஶ Śa श
𑌷 ஷ Ṣa ष	𑌸 ஸ Sa स	𑌹 ஹ Ha ह	𑌳 ள Ḷa ळ	𑌕𑍍𑌷 க்ஷ Kṣa क्ष

தமிழ் மொழியில் மெய்யெழுத்துகளை மட்டும் எழுதவேண்டுமானால் 'க், ங். ச். ஞ், ட், ண்,' என்று எழுத்தின் மேல் பாகத்தில் ஒரு புள்ளியை வைக்க வேண்டும். அதேபோல் க்ரந்த எழுத்தில் மெய்யெழுத்தை மட்டும் எழுத வேண்டுமானால் எழுத்தின் மேல்பாகத்தில் புள்ளிக்கு பதிலாக '𑍍' இது போன்று அடையாளம் செய்ய வேண்டும்.

உதாஹரணம் - '𑌕𑍍 𑌤𑍍 𑌵𑍍 𑌞𑍍 𑌟𑍍 𑌣𑍍' இவ்வாறு எல்லா எழுத்துகளையும் எழுத வேண்டும். ஒரு மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் சேர்க்கவேண்டுமானால் அதற்கு தனியாக அடையாளங்கள் இருக்கின்றன. அவைகளைக் கீழே கொடுக்கின்றோம்.

𑌕𑍍 + 𑌅 = 𑌕 என்கிற முதல் எழுத்தோடு கீழ் கொடுக்கப்படும் அடையாளங்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

𑌕𑍍 + 𑌆 = 𑌕𑌾 அடையாளம் '𑌾'

𑌕𑍍 + 𑌇 = 𑌕𑌿 அடையாளம் '𑌿'

𑌕𑍍 + 𑌈 = 𑌕𑍀 அடையாளம் '𑍀'

𑌕𑍍 + 𑌉 = 𑌕𑍁 அடையாளம் '𑍁'

𑌕𑍍 + 𑌊 = 𑌕𑍂 அடையாளம் '𑍂'

𑌕𑍍 + 𑌋 = 𑌕𑍃 அடையாளம் '𑍃'

𑌕𑍍 + 𑍠 = 𑌕𑍄 அடையாளம் '𑍄

𑌕𑍍 + 𑌌 = 𑌕𑍢 அடையாளம் '𑍢'

𑌕𑍍 + 𑍡 = 𑌕𑍣 அடையாளம் ' '

𑌕𑍍 + 𑌏 = 𑌕𑍇 அடையாளம் '𑍇'

𑌕𑍍 + 𑌐 = 𑌕𑍈 அடையாளம் '𑍈'

𑌕𑍍 + 𑌓 = 𑌕𑍋 அடையாளம் '𑍋'

𑌕𑍍 + 𑌔 = 𑌕𑍗 அடையாளம் '𑍗'

𑌕𑍍 + 𑌅𑌂 = 𑌕𑌂 அடையாளம் '𑌂'

𑌕𑍍 + 𑌅𑌃 = 𑌕𑌃 அடையாளம் '𑌃'

இதே போன்று ஒவ்வொரு எழுத்தையும் எழுதவேண்டும்.

கூட்டெழுத்துகள்

இரண்டு மெய்யெழுத்துகளைச் சேர்த்து எழுதும் போது ஒரு எழுத்தை எழுதி அதன் கீழ்பாகத்தில் மற்றொரு எழுத்தை எழுதவேண்டும்.

உதாஹரணம் -

க்+க்+அ = க்க	க்+க்+ஈ = க்கீ
க்+க்+இ = க்கி	க்+க்+உ = க்கு

இதேபோல் எல்லா எழுத்துகளையும் எழுத வேண்டும்.

சில குறிப்பிட்ட எழுத்துகளைமட்டும் சேர்த்து எழுதுவது வழக்கத்தில் காணப்படுகிறது. அவைகளைமட்டும் கீழே காண்பிக்கிறோம்;

க்+த்+அ=க்த	ஞ்+ஜ்+அ=ஞ்ஜ	ந்+ஜ்+அ=ந்ஜ
க்+வ்+அ=க்வ	த்+ய்+அ=த்ய	ந்+த்+அ=ந்த
க்+வ்+அ=க்வ	த்+வ்+அ=த்வ	ந்+ய்+அ=ந்ய
க்+ஷ்+அ=க்ஷ	த்+வ்+அ=த்வ	ஜ்+ஜ்+அ=ஜ்ஜ
ஜ்+ந்+அ=ஜ்ந	த்+ய்+அ=த்ய	ஷ்+ட்+அ=ஷ்ட
ஜ்+ஞ்+அ=ஜ்ஞ	த்+வ்+அ=த்வ	ஹ்+ஜ்+அ=ஹ்ஜ
ஞ்+வ்+அ=ஞ்வ	ந்+த்+அ=ந்த	க்+த்+ர்+அ=க்த்ர
ஞ்+வ்+அ=ஞ்வ	ந்+ந்+அ=ந்ந	க்+த்+ய்+அ=க்த்ய

மெய்யெழுத்தோடு 'ர' என்கிற எழுத்தை சேர்க்க வேண்டுமானால் எழுத்தின் அடி பாகத்தில் '◌்ர', இதை சேர்த்து எழுதவேண்டும்.

உதாஹரணம் -

க்ர, ஜ்ர, ட்ர, த்ர, வ்ர, என்பன.

'ய' என்கிற எழுத்தை எழுதும்போது எழுத்திற்கு பக்கத்தில் '◌்ய' இந்த அடையாளத்தை எழுதவேண்டும்.

உதாஹரணம் -

க்ய, வ்ய, ட்ய, த்ய, வ்ய, முதலியன.

காகித ஆவணங்கள்

சுவடிகள் மட்டுமல்லாது காகித ஆவணங்களையும் படித்தறிய அந்தந்த பகுதி மக்களின் வட்டார வழக்குச் சொற்கள் பற்றி தெரிந்திருந்தால் மட்டுமே இவை போன்ற ஆவணங்களை எளிதில் படிக்க இயலும். எடுத்துக்காட்டாக கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆவணத்தைப் பார்ப்போம்.



இந்த ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடும் பொழுது வெங்கார ஓடை என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல் தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் கிராமப் புறங்களில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்ச செல்லும் விவசாயப் பெருங்குடி மக்களால் வயலுக்கு வங்கார் பாய்ச்சி வந்தேன் என்ற வழக்குச் சொல்லாகப் பேசப்பட்டு வருகின்றது. மேலே கூறப்பட்ட வெங்கார ஓடை என்பது நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் ஓடை இப்பெயரில் வழங்கப்பட்டது தெரியவருகின்றது. இன்று மக்களிடையே வழங்கப்படும் வட்டார வழக்குச் சொற்கள் சங்கநூல்களிலும் காணப்படுவது தொன்றுதொட்டு ஒரு சொல் மக்களிடம் பயன்பாட்டில் இருந்துவருவதை காணமுடிகின்றது. இச்சொல் குறித்து சீவகசிந்தாமணியும்,

. . . .

சீவக சிந்தாமணி

சுடுமண் மிசைமாரி சொரியச்
சூழ்ந்து சுமந்தெழுந்து
நெடுநன் னிமிராவி நாறு
நெய்தோய் தளிர்மேனி
துடிநுண் ணிடைப்பெருந்தோட் டுவர்வா
யேழை மலர்மார்பன்
கடிநன் மலர்ப்பள்ளி களிப்பக்
காமக் கடலாழ்ந்தான். (2503)

சுடுமண் - ஞாயிற்றின் வெப்பத்தால் நன்கு சுடப்பட்ட மண்.இதனை வெங்கார்மண் என்பது இன்றும் வழக்கில் உள்ளது. வெங்கார் மண்ணிலே ஞெரேலென மழை பொழியுங்கால் ஓர் ஆவி தோன்றி மணப்பது இயல்பு. இம்மணம் சிறந்த மகளிர் மேனியின் மணத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது.

பரிபாடல்

காலைக் கடல்படிந்து காய்கதிரோன் போயவழி
மாலை மலைமணந்து மண்டுயின்ற கங்குலான்
வானாற்று மழைதலைஇ மரனாற்று மலர்நாற்றம்
தேனாற்று மலர்நாற்றம் செறுவெயிலுறு கால
கானாற்றுங் கார்நாற்றங் கொம்புதிர்த்த கனிநாற்றம்
தானாற்றங் கலந்துடன் றழீஇவந்து தரூஉம்

வையை (20:6-11)

காலைப்பொழுதிலே கடல்நீரை முகந்து மாலைப் பொழுதின் வெய்யோன் மறையும் மலையைச் சேர்ந்து, மேகம் மழை பெய்தலால் வையை மரங்கள் தரும் மலர் நாற்றமும், தேன் தந்த மலர் நாற்றமும், செருவெயிலையும் மிக்க காற்றையும் உடையவாகிய காடுகள் தரும் வெங்கார் நாற்றமும், மரக்கோடுகள் உதிர்த்த கனிகளது நாற்றமுமாகிய இந்நாற்றங்களை உடன் கலந்து தான் கொண்டு வந்து பிறர்க்குக் கொடா நின்றது.

தமிழ்ச்சுவடிகள்

உலகில் முதலில் வாழ்ந்த மக்கள் தமிழர்கள் என வரலாறு கூறுகின்றது. கடல்கோளால் அழிவிற்குள்ளான தென்மதுரையில் கி. மு. 9990 தொடங்கி முதல், இடை, கடைச்சங்கம் என முச்சங்கங்கள் அமைத்துத் தமிழ் மொழியை வளர்த்தனர். தமிழ்மொழி வளர்ச்சியினால் தமிழர் நாகரீகம் உலகெங்கும் பரவியிருந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருமொழி என்பது சில ஆண்டுகளில் உருவாக்கப்பட்டதன்று. சில மேலைநாட்டு மொழி போன்றதல்லாமல் தமிழ்மொழியில் ஒவ்வோரெழுத்திற்கும் ஒவ்வோரொலிகொண்டு செப்பமுடன் அமைந்துள்ளதைக் காணலாம். ஒரு மொழித்தொடர் ஆக்கம்பெற்று வளர்ந்து எதிர்காலத்திற்கேற்ப சொற்களையும், சொற்றொடர்களையும் செம்மை செய்து அழகும், சுவையும்கூட அமையப்பெறும்.

மொழியில் செய்யுள் வடிவம்பெற மேலும் பல நூற்றாண்டு களாகும். அவ்வாறு தமிழ்மொழிக்கு அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் உருவாக்கப்பட்டன. காலத்தின் சுழற்சியால் அகத்திய மெனும் இலக்கண நூல் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனினும் அதன் வழிநூல் எனப்படும் தொல்காப்பியம் தமிழ் மொழிக்கான இலக்கணத்தை எடுத்துக் கூறுவதுடன், அக்கால மக்களின் நாகரீகம் மற்றும் மொழியின் வளர்ச்சியை எடுத்தியம்புகிறது. வளர்ச்சியடைந்த தமிழ்மொழி தண்டமிழ், பைந்தமிழ், கன்னித்தமிழ், முத்தமிழ், செந்தமிழ் என பல அடைமொழிகளால் அழைக்கப்பெறுகிறது. இவ்வாறாக செந்தமிழ் என அழைக்கப்படும் தமிழ் மொழிக்குப் பெருமை தருவன அதன் நெடுங்கணக்குமுறை. சொற்களஞ்சியம், இலக்கியங்களின் சிறப்பு மற்றும் இலக்கணங்களின் செறிவும் ஆகும். அவ்வாறு தமிழ் மொழியில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு உருவான சில நூல்கள் மறைந்து போனாலும் பல நூல்கள் இன்று நமக்கு கிடைக்கக் காரணமாக இருப்பது ஓலைச்சுவடிகளே என்றால் அது மிகை யாகாது. பொதுவாக ஓலைச்சுவடிகளை சுமார் 500 ஆண்டுகளுக்கு சாதாரண நிலையில் பாதுகாக்கலாம். சுவடிகள் வைப்புமுறை, முறையாகக் கையாளுதல் மற்றும் காலமுறை கண்காணிப்பு செய்யப்படின் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பாதுகாக்கமுடியும். நம் முன்னோர்கள் அவ்வாறு தொடர் பாதுகாப்பு செய்தமையால் இன்று பழங்கால இலக்கியம், இலக்கணம், சமயம், மருத்துவம் போன்ற நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

நமது முன்னோர்கள் தமது அனுபவத்தையும், பட்டறிவையும், பிற்காலச் சந்ததியினருக்கு பயன்பட வேண்டும் என்று எண்ணி பதிவு செய்தனர். முதன் முதலில் கல் (பாறைகள், குகைச்சுவர்கள்) எழுது பொருட்களாகப்

பயன்படுத்தப்பட்டது. அதன்பின் செங்கல், ஓட்டுச்சில், உலோகத்தகடுகள் பயன்படுத்தப்பட்டன. இப் பொருட்களைக் கையாளுவதும், தயாரிப்பதும் கடினமாக இருந்ததால், எழுதுவதற்கு எளிதான மரப்பலகைகள், பனை ஓலைகள், மிருகங்களின் தோல், எலும்புகள், துணிகள், மூங்கில் தப்பைகள், பேப்பரைசு என்ற நீர் தாவரத்தாலான தட்டுகள் போன்றவை பயன்படுத்தப் பட்டன. நமது இலக்கியங்களைக் கல்லில் வெட்டுவது மிகவும் கடினம் ஆகையால் ஒருசில இலக்கியங்கள் மட்டுமே கல்வெட்டாகக் கிடைக்கின்றன. எனவே இலக்கியங்கள் எழுதுவதற்கு பனை ஓலைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஓலைகள் இலக்கியம், இலக் கணம், சமயம், மருத்துவம் போன்ற நூல்கள் எழுதுவதற்கு பயன்பட்டது மட்டுமின்றி வரலாற்றுத் தகவல்கள் கொண்ட ஆவணங்கள், குறிப்புகள், கடிதங்கள், சமய நிகழ்வுகள், குடும்ப நிகழ்வுகள் போன்ற அனைத்துத் தகவல்களையும் பதிவு செய்யப் பயன்படுத்தப்பட்டன. சோழ மன்னர்கள் காலத்தில் தேர்தல் முறையை குடவோலை முறை என்று குறிப்பிட்டதைக் கொண்டும், பனை ஓலைகளில் எழுதும் வழக்கம் தென்னிந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவியதாக குறிப்பிடுகின்றன. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஓலைகள் எழுதுவதற்குப் பயன்படுத்தியிருந்தாலும் இந்தியாவின் தட்ப வெட்பநிலை, சமய, சமுதாய மாற்றம், மன்னர்களுக்கிடையேயான போர், கல்வி, கலைகளில் ஆர்வமற்ற மன்னர்களின் செயல்பாடுகள் போன்ற காரணங்களால் பல சுவடிகள் அழிவிற்குள்ளாயின. இந்தியாவில் 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் எழுதப்பட்ட சுவடிகள் சிலவும், 16ஆம் நூற்றாண்டிற்குப் பின் எழுதப்பட்ட பல சுவடிகளும் கிடைக்கின்றன. இதுபோன்று அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்ட சுவடிகள் இன்று இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் உள்ள பல நூலகங்களிலும் சுவடி ஆர்வலர்களின் இல்லங்களிலும் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

சரசுவதி மகால் நூலகம்

உலகின் நாகரிகத்தோற்றம் ஆற்றங்கரைகளில் தொடங்குகின்றது. அந்த வகையில் காவிரியின் வளத்தால் சிறப்புற்றுத் திகழும் தஞ்சை ஆயிரமாயிரம் ஆண்டுகள் தொன்மைமிக்க ஊராகும். செழுமை பொருந்திய இவ்வூரில் உலகம் போற்றும் நூலகமாக சரசுவதி மகால் நூலகம் செயல்பட்டு வருகின்றது.

சரசுவதி பண்டார் என்றழைக்கப்பட்ட இந்நூலகம் பின்னர் கி. பி. 1918ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் எனப்பெயர் மாற்றம் பெற்றது.

கி. பி. 1798இல் சரபோஜி பொறுப்பிற்கு வருமுன், இந்நூலகத்தில் சேகரித்து வைக்கப்பெற்ற தமிழ் இலக்கியச் சுவடிகள் 719, மருத்துவச்சுவடிகள் 118 மொத்தம் 837 சுவடிகள் இருந்தன. கி. பி. 1925இல் தமிழறிஞர் சைவப்புலவர் எல். உலகநாதப்பிள்ளை அவர்களால் 719 தமிழ் இலக்கியச் சுவடிகள் இரண்டு தொகுதிகளாகவும், 118 மருத்துவச் சுவடிகள் மூன்றாம் தொகுதியாகவும் சுவடி நூல் விவர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, புலவர் வீ. சொக்கலிங்கம் போன்றோர் சுவடிகளுக்கு விவர அட்டவணைகள் தயாரித்தனர். இன்று 26 தொகுதிகள் வெளிவந்துள்ளது.

பின்னர் தொடர்ந்து சுவடிகளைச் சேகரிக்கும் முயற்சியால் இன்று சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடிகளின் எண்ணிக்கை மொழி வாரியாக, தமிழ் மொழியில் 7,700க்கும் மேற்பட்ட தலைப்புகளில் 4,730 சுவடிகளும்,

சமஸ்கிருத மொழியில் 49,000 தலைப்புகளில் 37,000 சுவடிகளும், மராத்தி மொழியில் 3,000 தலைப்புகளில் 2,954 சுவடிகளும், தெலுங்கு மொழியில் 1,200 தலைப்புகளில் 824 சுவடிகளும் உள்ளன.

65,000க்கும் மேற்பட்ட பல மொழிகளில் அமைந்த அச்சு நூல்களையும் கொண்டு திகழ்கின்றது இந்நூலகம். மொழி வாரியாகத் துறைகள் பிரிக்கப்பட்டு மொழிப் பண்டிதர்கள் மற்றும் நூலகர்கள் திறம்பட பணிசெய்து வருகின்றனர். சுவடிகளைப் பாதுகாக்கும் பொருட்டு வேதிமப் பாதுகாப்புப் பிரிவும், சுவடிகளை நுண்படம் எடுத்துப் பாதுகாக்க நுண்படப்பிரிவும், சுவடிகளிலிருந்து பதிப்பாக்கம் பெறும் நூல்களை அச்சிடுவதற்கு அச்சகமும் கொண்டு விளங்குகின்றது. மேலும் பொதுமக்கள் பார்வையிடும் பொருட்டு இந்நூலகத்தில் சிறந்த அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு எனும் பதினெண் மேற்கணக்கில் திருமுருகாற்றுப்படைச் சுவடிகளும், அவற்றின் பின் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், திரிகடுகம் ஆகிய நூற்சுவடிகளும் உள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகிய இரு நூற்சுவடிகள் உள்ளன. இந்நூலகச் சுவடிகளில் திருக்குறள் 27 பிரதிகளும், கம்பராமாயணம் 54 பிரதிகளும், சூடாமணி நிகண்டு 37 பிரதிகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டைய இலக்கியச் சுவடிகள் மிகக் குறைந்த நிலையில், சமய இலக்கியச் சுவடிகள் சிற்றிலக்கியச் சுவடிகள், இலக்கணச்சுவடிகள், புராணச்சுவடிகள் முதலியன மிக அதிகமாகக் காணப்படுகின்றன. தேவாரம், பாரதம், இராமாயணம் முதலிய சமய, காப்பிய இலக்கியச் சுவடிகள்

பல பிரதிகளைக் கொண்டுள்ளன. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், சிதம்பரப் பாட்டியல், தண்டியலங்காரம், தொன்னூல் விளக்கம் முதலான இலக்கணச் சுவடிப் பிரதிகளும், திவாகர நிகண்டு, சூடாமணி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, பிங்கல நிகண்டு, அகராதி நிகண்டு முதலான நிகண்டு நூற்சுவடிகளும் இந்நூலகத்தில் உள்ளன.

அருணகிரிப் புராணம், ஆத்திச்சூடிப் புராணம், அவிநாசிப் புராணம் முதலான புராண இலக்கியச் சுவடிகள் ஏறத்தாழ 50 தலைப்புகளிலும், பிள்ளைத்தமிழ் நூற்சுவடிகள் 12 தலைப்புகளிலும், அந்தாதி இலக்கியச் சுவடிகள் 27 தலைப்புகளிலும், வண்ண இலக்கியச் சுவடிகள் 11 தலைப்புகளிலும், அம்மானை இலக்கியச் சுவடிகள் 19 தலைப்புகளிலும், நாடக நூல்கள் 15 தலைப்புகளிலும், கதைச்சுவடிகள் 31 தலைப்புகளிலும் இங்கு உள்ளன. ஜோதிட கிரக சிந்தாமணி, வாராகர் ஓரா சாத்திரம், பஞ்சபட்சி சாத்திரம் முதலான சோதிட நூற் சுவடிகளும் இங்கு இடம்பெற்றுள்ளன.

இந்நூலகத்தில் உள்ள மருத்துவ நூற்சுவடிகள் சித்தர்கள் பெயரால் அமைந்த நூற்சுவடிகள் வைத்தியத் திரட்டு சுவடிகள், அனுபவ வைத்தியமுறை கூறும் சுவடிகள் எனப் பல வகையின உள்ளன. தமிழ்த்துறையில் உள்ள பல புகழ்பெற்ற சித்தமருத்துவச் சுவடிகள் சித்த மருத்துவ ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. இந்நூலகத்தில் உள்ள மருத்துவச் சுவடிகளில் சரபேந்திர வைத்திய முறைகள் என்னும் தலைப்பிலான ஓலைச்சுவடிகள் தனித்தன்மை வாய்ந்தவை. இந்நூலகத்தின் தனிச்சொத்தாக அமைந்தவை. அவைகள் இங்கு மட்டுமே உள்ளது.

சரபேந்திர வைத்திய முறைகள், காச சுவாச சிகிச்சை, குன்மரோக சிகிச்சை, உளமாந்தை, சயரோக சிகிச்சை, கர்ப்பிணி பாலரோக சிகிச்சை, சந்நிரோக சிகிச்சை, சிரரோக சிகிச்சை, சூலை, குட்டம், மூலம், பித்த சிகிச்சை, நயனரோக சிகிச்சை, நீரிழிவு சிகிச்சை, பாண்டு காமாலை சிகிச்சை, பித்தரோக சிகிச்சை, பேதி முறைகளும் அதிசார சிகிச்சையும், வாதரோக சிகிச்சை, விரணம், கரப்பான் ரோக சிகிச்சை, விஷரோக சிகிச்சை, ஜ்வர ரோக சிகிச்சை ஆகியனவாகும்.

மராட்டிய மன்னர் சரபோஜி மருத்துவர்கள் தங்கள் மருத்துவம் சார்ந்த அனுபவத்தைச் சொல்லச் சொல்ல தமிழ்ப்புலவர்களைக் கொண்டு அவற்றைச் செய்யுள் வடிவில் இயற்றச் செய்தார். இவையே சரபேந்திர வைத்திய முறைகள் என்னும் தலைப்பிலான சுவடிகளில் இடம்பெற்றுள்ளன. இச்சுவடி நூல்கள் திருவேங்கடத்தாப் பிள்ளை, காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர் வேங்கடாஜலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர் முதலியோரால் இயற்றப்பெற்றனவாகும்.

அச்சில் வெளிவந்த நூல்களைப் பார்த்து எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளும் இந்நூலகத்தின்கண் உள்ளன. கர்ணமகாராசன் சண்டை, நளவெண்பா முதலியன அவ்வகையைச் சார்ந்தவை. அச்சுவடிகளின் தொடக்கத்திலும், ஈற்றிலும் அச்சுவடி எந்த அச்சுநூலைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்டது. எந்த அச்சகத்தில் எந்த ஆண்டு அச்சிடப்பட்டது. விலை என்ன முதலிய விவரங்கள் இடம்பெற்றுள்ளமை சுவை பயக்கும் செய்தியாகும். இத்தகைய சுவடிகள் சுவடியியலில் குறிப்பிடத்தக்கவை யாகும்.

சரசுவதி மகால் நூலகத்தில் பிற மொழிகளில் எழுதப்பட்டுள்ள தமிழ்ச் சுவடிகள்

மோகினி விலாச குறவஞ்சி,

சங்கரநாராயண விலாச நாடகம்,

தியாகராஜர் குறவஞ்சி,

விஷ்ணு சாகராஜ விலாசம்,

பாவப்பிரகாசிகா,

வாசுதேவ கவி பதங்கள்.

சரசுவதி மகால் நூலகப்பதிப்புகள்

சரசுவதி மகால் நூலகம் இதுவரை 200க்கும் மேற்பட்ட தமிழ்ச்சுவடிப் பதிப்பு நூல்களை வெளியிட்டுள்ளது. இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் ஆகிய பிரிவுகளில் அமைந்த நூல்கள் பல இதுவரை வெளிவந்துள்ளன. நூலக மொழிப் பண்டிதர்களும், நூலகச் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களும் சுவடிகளைப் பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், தொல்காப்பியம் ஆகிய இலக்கண நூல்கள் இதுவரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இலக்கண விளக்கத்தின் எழுத்து, சொல், பொருள், அகத்திணையியல், புறத்திணையியல், யாப்பு, பாட்டியல் பகுதிகள் தனித்தனித் தொகுதிகளாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. தமிழ்க்கடல் தி. வே. கோபாலய்யர் இந்நூற் தொகுதிகளைப் பதிப்பித்துள்ளார். ஓர் ஆராய்ச்சிப் பதிப்பு எந்த வகையில் திகழ வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இப்பதிப்பு அமைந்துள்ளது. நூற்பா, உரை, ஒத்த நூற்பாக்கள், மேற்கோள் முதலியன அமையவும், பல வகை அகராதிகள்,

அடைவுகள், பிற்சேர்க்கைகள் இடம்பெறவும் இப்பதிப்பு ஆய்வுப்பதிப்பாக மலர்ந்துள்ளது. இலக்கண விளக்கத்திற்குத் தமிழுலகில் நூலால் சிறப்பு என்பதைவிட இப்பதிப்பால் சிறப்பு என்பதே பொருத்தமானதாம்.

நாலடியார் நூலைப் பல சுவடிகளை ஒப்புநோக்கிப் பாடவேறுபாடு காட்டியும், சுவடிகளிலிருந்து அரிய மூன்று உரைகளை இடம்பெறச் செய்தும், ஒப்புமை மேற்கோள் பகுதிகளை அளித்தும், பல்வேறு விசேடக் குறிப்புகளையும், அடிக்குறிப்புகளையும், அகர நிரல்களையும் அமைத்துத் திருவாளர்கள் முத்துரத்தின முதலியாரும், எம். ஆர். கந்தசாமிப்பிள்ளையும் இணைந்து பதிப்பித்துள்ளனர். நாலடியார் உரைவளம் எனும் இந்நூல் சரசுவதி மகாலின் தலைசிறந்த பதிப்புகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. மேலும் நீதித்திரட்டு எனும் தொகைநூல் பாவலர் ச. பாவசுந்தரனார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. 32 நூல்களிலிருந்து பாக்கள் தொகுக்கப் பெற்றவனாக இச்சுவடி அமைந்துள்ளது. இந்நூலும் விரிவான ஆய்வு முகவுரை, யாப்புக்குறிப்பு, குறிப்புரை, பல அகர நிரல்கள் ஆகியனவற்றைக்கொண்டு சிறந்த ஆய்வுப் பதிப்பாக விளங்குகின்றது.

சரபேந்திர வைத்தியமுறைகள் எனும் பொதுத் தலைப்பில் பாண்டு, காமாலை, சயம், சூலை, குட்டம், மூலம், பித்தம் முதலான தனித்தலைப்புகள் பெற்றிலங்கும் சுவடிகள் அனைத்தும் தெளிவான உரை எழுதப்பெற்றுப் பதிப்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பிற சிற்றிலக்கியப் பதிப்புகளில் ஆத்திச்சூடிப் புராணம், தனிப்பாடல் திரட்டு, திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு, செப்பறை கனகசபை நாதன் உலா முதலியன சிறந்த ஆய்வுப்பதிப்புகளாகத் திகழ்கின்றன. புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட

ஆத்திச்சூடிப் புராணம், ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா ஆகியவற்றுடன் ஒப்பிடப்பெற்றும், ஆய்வுக்குறிப்புகள் அமையவும் பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாவலர் பாலசுந்தரனார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ள தனிப்பாடற்றிரட்டு இரு தொகுதிகளும் நற்பதிப்பு நூல்களாகத் திகழ்கின்றன. புலவர் ப. வெ. நாகராசன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ள திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு, உலா ஆகிய இரு நூல்களும் குறிப்புரை விரிவான ஆராய்ச்சி முகவுரை, சிறப்புப் பெயர் அகர நிரல் முதலானவையும் முறையே பள்ளு நூற்பட்டியல், உலா நூற்பட்டியல் ஆகியனவும் அமையச் சிறந்த பதிப்புகளாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சியில் குறவஞ்சிப் பாடல்களின் பட்டியலும், கமலாலய அம்மன் பிள்ளைத் தமிழ், பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் நூல்களின் பட்டியலும் நன்னாவூர் சங்கமேசுவரர் விறலிவிடு தூது நூல்களின் பட்டியலும் அளிக்கப்பட்டுள்ளமை அப் பதிப்புகளின் தரத்தை உயர்த்துகின்றன.

தமிழ்த் தொடர்புடைய வடமொழிச்சுவடிகள்

தமிழ் மற்றும் வடமொழி யாப்பின் அமைப்புகள் வெவ்வேறானவை. மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜியின் காலத்தில் வாழ்ந்த சப்தரிஷி என்னும் இருமொழிப் புலவர் ஒரு புதுமையைக் கையாண்டுள்ளான். இவர் இயற்றிய மோகினி விலாச குறவஞ்சி என்னும் நூலில் தமிழ் யாப்பியலில் காணப்படும் வெண்பா கட்டளைக் கலித்துறை, அகவல், அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், மட்டு விருத்தம் போன்ற யாப்புகளை தமிழிலக்கணப்படி கையாண்டு வடமொழிச் சொற்களுடன் புனைந்துள்ளார். இது தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலுமுள்ள யாப்பிலக்கண ஆராய்ச்சி யாளர்களுக்கு ஒரு வித்தாக அமையும்.

தமிழிலக்கிய ஒப்புமைச்சுவடிகள்

சேக்கிழார் பெருமானால் இயற்றப்பெற்ற பெரிய புராணம் தமிழகத்தின் வரலாறு, கலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றின் கண்ணாடியாகத் திகழ்வதாகும். இதில் கூறப்படும் நாயன்மார்களின் வரலாற்றை சிவபக்த விலாசம் என்னும் வடமொழி நூல் கூறுகிறது. சிவபக்த விலாசம் என்ற பெயரில் இரண்டு நூல்கள் உள்ளன. அகத்தியர் அருளிய சிவபக்த விலாசம் என்று அழைக்கப்படும் இந்த இரண்டு நூல்களுமே அச்சிடப் பெற்றுள்ளன. இவ்விரண்டையுமின்றி நாயன்மார்களின் வரலாற்றினைச் சுருக்கமாகக் கொண்டுள்ள மற்றொரு சுவடி சிவரகசியம் என்னும் நூலாகும். இது 9ஆவது அம்சத்தில் 18 அத்தியாயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றை தடுத்தாட்கொண்ட புராணம் தொடங்கி விளக்குகின்றது. மேலும் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டுள்ளவாறே நாயன்மார்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

பிறமொழி எழுத்துக்களில் தமிழ்ச்சுவடிகள்

மராட்டிய மன்னர்களின் காலத்தில் தஞ்சை அரண்மனையில் இசை, நாட்டியக்குழு பணியாற்றி வந்தது. இக்குழுவில் பணியாற்றியவர்களும், பங்கு கொண்ட கலைஞர்களும், தெலுங்கு மொழி பேசிய தெலுங்கர்கள், இவர்களுக்குத் தமிழ் மொழியில் எழுதப்படிக்கத் தெரியாது. இதனால் தமிழ்மொழி நாடகங்களை நடிக்க வேண்டுமாயின் தங்களது வசதிக்கேற்ப கிரந்தம், தேவநாகரி அல்லது தெலுங்கு மொழி எழுத்துக்களில் தமிழை எழுதிக்கொண்டு பயன்படுத்தி வந்துள்ளனர். இச்சுவடிகள் நாடகத்தின் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ உள்ளன. இத்தகைய தமிழ் மொழி நாடகங்களும், தமிழிசைப் பாடல்களும் வேற்றுமொழி எழுத்துக்களில் எழுதப்பெற்ற தமிழ் மொழிச் சுவடிகளாகும்.

சுவடியை மேலெழுந்தபடி பார்க்கும்போது வேற்று மொழியாகக் காணப்பட்டாலும், அவற்றைப் படிக்கும் போதுதான் அதன் உண்மை தெரியவரும். இவற்றைப் பதிப்பிக்க தமிழ்மொழி அறிவுடன் பிற மொழிகளில் நல்ல பயிற்சியும் தேவை.

ஏடுகளில் ஓவியம்

பனை ஓலைகளில் அரிதின் முயன்று எழுத்தாணி கொண்டு சில கோட்டோவியங்களை வரைந்துள்ளனர். இத்தகைய ஓவிய ஏடுகள் இந்நூலகத்திலுள்ளன. திருவாய் மொழி வாசகமாலை எனும் சுவடி நூலில் கிடந்த கோலத் திருமாலின் வரைகோட்டோவியம் காணப்பெறுகின்றது. அதுபோன்றே வடமொழிச் சுவடிகளில் பலவகையான பூவேலைப்பாட்டோவியங்கள் காணப்பெறுகின்றன. காகிதச் சுவடிகளிலும், அதன் முகப்புப் பலகைகளிலும் பல வகையான வண்ண ஓவியக் காட்சிகளைத் தீட்டும் அரிய கலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிக்கோங்கியிருந்தது. இராமாயணம், பாகவதம், பாரதம், புராணங்கள் போன்றவை காட்சி வடிவம்பெற்றன. நூல் படைத்த புலவர், ஆக்கம் தந்த மன்னர் ஆகியவர்களின் உருவ ஓவியங்களும் சுவடிகளில் இடம்பெற்றுள்ளன.

கலை, இலக்கியம், ஜோதிடம், வரலாறு. மொழி, இலக்கணம் போன்ற பல்வேறு பிரிவுகளில் அரிய பல செய்திகளையும் ஆய்வாளர்களுக்கு விருந்தளிக்கும் விதமாகவும் இந்நூலகச் சுவடிகள் சிறப்பு பெற்றுத் திகழ்கின்றன. இவற்றைப் போற்றிப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமையாகும்.

இந்நூலகத்தில் மத்திய அரசினுடைய நிதி நல்கையினால் 1990ஆம் ஆண்டு முதல் தமிழ் ஓலைச்சுவடிகளை படித்தறியும் விதமாக பயிற்சி வகுப்புகள்

நடைபெற்று வந்தன. 2011ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்ச் சுவடியியல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், சோதிட வல்லுநர்கள் மற்றும் சித்த மருத்துவர்கள் சுவடியினைப் படித்தறியும் திறன் பெறுகிறார்கள்.

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர்

தமிழ்ச்சுவடிப் பதிப்பில் பல்வேறு அறிஞர் பெருமக்களின் பங்களிப்பு இருந்தாலும், அவர்களில் எல்லாம் சிறப்பான பணிசெய்து தமிழ்த் தாத்தா என்று போற்றப்படும் பெருமைக்குரியவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஆவார். (கி.பி.1855-1942) சங்க நூல்களையும் பழைய காவியங் களையும் நல்ல முறையில் அச்சிட்டுத் தமிழில் புதிய மலர்ச்சியை உண்டாக்கியவர். பழைய தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் சங்கீத வித்வானாகிய வேங்கடசுப்பையருக்கும், சரசுவதி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். தன் தந்தையாரிடத்திலும், அரியலூர் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் போன்றோரிடத்தில் இளமையில் கல்வி கற்றார்.

1870ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்து அவருடைய இறுதிக்காலம் வரை உடன் இருந்து பாடம் கேட்டுவந்தார். 1880ல் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணிசெய்யத் தொடங்கினார். 1887ல் சீவகசிந்தாமணியை நச்சினார்க் கினியர் உரையோடு வெளியிட்டார். அந்தப்பதிப்பு இவருக்கு பெரும் மதிப்பை உண்டாக்கியது. அதுமுதல் ஏட்டுச்சுவடிகளைத் தொகுத்து ஆராய்ந்து, தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் தொண்டில் ஈடுபட்டார்.

சீவகசிந்தாமணிக்குப் பின் பத்துப்பாட்டு, சிலப்பதி காரம், புறநானூறு, மணிமேகலை போன்ற நூல்கள் வெளிவந்தன. ஏட்டில் இருப்பதை அப்படியே பெயர்த்து காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று இவர் செய்தது. ஏட்டில் உள்ள பாடல் பிழைபட்டிருக்கும் பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்கமுடியாத அளவிற்குச் சிதைவு உண்டாகியிருக்கும், அவற்றை எல்லாம் பல நூல்களின் பயிற்சியாலும், தன் அறிவுத் திறத்தாலும், விடா முயற்சியாலும் உண்மை கண்டுணர்ந்து செப்பமுடன் நூல்களைப் பதிப்பித்தார். இவருடையப் பதிப்பை தமிழ்ப் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். ஒவ்வொரு நூலிலும் உள்ள முகவுரையும், ஆசிரியர் வரலாறும், நூலைப்பற்றிய குறிப்புகளும், பிற செய்திகளும் சிறப்பாக அமைந்திருக்கும். நூலின் ஒவ்வொருப் பக்கத்திலும் அடிக்குறிப்பில் பலவகையான விளக்கங்களும், பல நூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய ஒப்புமைப் பகுதிகளையும் கொடுத்திருப்பார்.

மிக அதிக அளவில் தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்து நூலாக வெளியிட்ட போற்றுதலுக்குரிய இவரைப்பற்றி மகாகவி பாரதி மகாமகாபாத்யாயர் என்னும் தலைப்பில் பாடிய பாடல்,

செம்பரிதி ஒளிபெற்றான் பைந்தரவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரே கொல் உவத்தல் செய்வார்
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் சூறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல், இதற்கென்கொல்
பேருவகை படைக்கின்றீரே. (1)

அன்னியர்கள் தமிழ்ச் செல்வி யரியாதார்
இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியர் சீர் மகாமகோ பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர் சாமிநா
தன்றனுக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன் பெருமை மொழிய லாமோ ? (2)

நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம், என்று மனம் வருந்தற்க
குடந்தை நகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே. (3)

இப்பெருமகனார் பதிப்பித்து அளித்த நூல்கள்,

அழகர் கிள்ளை விடுதூது
உதயணகுமார காவியம்
ஐங்குறுநூறு - பழைய உரை
கடம்பர் கோயில் உலா
கம்பராமாயணம்
கலைசைக் கோவை
குமரகுருபரன் சுவாமிகள் பிரபந்தங்கள்
குறுந்தொகை
கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்
இயற்றிய பிரபந்தங்கள்
சங்கர நயினார் கோயில் அந்தாதி
சங்கரலிங்க உலா
சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார்

சிதம்பரச் செய்யுட் கோவை
சிராமலைக் கோவை
சிவ சிவ வெண்பா
சீவகசிந்தாமணி
சூரைமாநகர்ப் புராணம்
சூளாமணி
தக்கயாகப்பரணி
தமிழ்நெறி விளக்கம்
தமிழ்விடு தூது
தனிக்கவித் திரட்டு
திரு இலஞ்சி முருகனுலா
திருக்கழுக்குன்றத்து உலா
திருக்கழுக்குன்றத்துச் சிலேடை வெண்பா
திருக்காளத்தி நாதருலா
திருப்பாதிரிப்புலியூர் கலம்பகம்
திருப்பூவன நாதருலா
திருமயிலைத் திரிபந்தாதி
திருமயிலையாண்டவர் குறவஞ்சி
திருமூலர் உலா
திருவாரூர்க் கோவை
திருவாரூர்த் தியாகராச லீலை
திருவாவடுதுறைக் கோவை
தூது நூற்கோவை
தென்றல் விடு தூது
தேவையுலா
நல்லுரைக் கோவை
நன்னூல்
நீதிநெறி விளக்கம்
பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியம்
பதிற்றுப்பத்து
பரிபாடல்
பழநிப் பிள்ளைத் தமிழ்
பழமலைக் கோவை
பாசவதைப் பரணி

புகையிலை விடுதூது
புறநானூறு - பழைய உரை
புறப்பொருள் வெண்பா மாலை
பெருங்கதை
மகர நெடுங்குழைக் காதர் பாமாலை
மன்னிப் படிக்கரைப் புராணம்
மணிமேகலை
மதுரைச் சொக்கநாதருலா
மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
மதுரை மும்மணிக் கோவை
மலைபடுகடாம் - நச்சினார்க்கினியம்
மான்விடு தூது
முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
மும்மணிக் கோவை
வண்டுவிடு தூது
வலிவல மும்மணிக் கோவை
விக்கிரம சோழனுலா
வீரவன புராணம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு

தமிழ் ஓலைச்சுவடிகள் இடம்பெற்றுள்ள நிறுவனங்களுள் சில

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், திருப்பதி.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோயம்புத்தூர்-10.

கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு-1.

கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை-5

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை.

தமிழ்ச் சங்கம், மதுரை.

பிரெஞ்ச் இன்ஸ்டியூட் நிறுவனம், புதுச்சேரி.

திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

ஸ்ரீ மவுனசுவாமிகள் மடம், சிதம்பரம்.

கவுமார மடலாயம், சரவணம்பட்டி, கோவை.

ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை.

இந்திய அலுவலக நூலகம், லண்டன்.

பிரிட்டிஷ் அருங்காட்சியகம், லண்டன்.

ராயல் ஏசியாடிக் சொசைட்டி நூலகம், லண்டன்.

எடின்பர்க் பல்கலைக்கழக நூலகம், லண்டன்.

ஸ்காட்லாந்து எடின்பர்க் தேசிய நூலகம், ஸ்காட்லாந்து.

கிளாஸ்கோ பல்கலைக்கழக ஹண்டேரியன் நூலகம்,
கிளாஸ்கோ, ஸ்காட்லாந்து.

ஜான் ரைலாட்ஸ், மான்செஸ்டர், இங்கிலாந்து.

கேம்ப்ரிட்ஜ், பல்கலைக்கழக நூலகம், கேம்பிரிட்ஜ்.

போடிலியன் நூலகம், ஆக்ஸ்போர்டு.

ட்ரினிட் கல்லூரி, பாப்லின் நூலகம், அயர்லாந்து.

பிபிலோதேகு நேஷனல், பாரிஸ், பிரான்ஸ்.

தேசிய அருங்காட்சியகம், கோபன்ஹேகன், டென்மார்க்.

ராயல் நூலகம், கோபன்ஹேகன், டென்மார்க்.

பிபிலோதேகா அப்போஸ்டிலிகா, வாடிகன் நகரம், ரோம்.

ஜெர்மன் ஓரியண்டல் சொசைட்டி நூலகம், ஹேரல், கிழக்கு ஜெர்மனி.

லூதரன் மிஷன் சர்ச் அருங்காட்சியகம், லிப்ஷிக், கிழக்கு ஜெர்மனி.

மாநில மற்றும் பல்கலைக்கழக நூலகம், ஹம்பர்க், மேற்கு ஜெர்மனி.

உப்சலா பல்கலைக்கழக நூலகம், உப்சலா, சுவீடன்.

லெனின் மாநில நூலகம், மாஸ்கோ, சோவியத் யூனியன்.

லெனின்கிராடு பல்கலைக்கழக நூலகம், லெனின்கிராடு, சோவியத் யூனியன்.

சோவியத் யூனியன் ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட் நூலகம், லெனின்கிராடு, சோவியத் யூனியன்.

சோழர் காலத் தமிழ் எழுத்துக்கள்
(முதலாம் இராசராசன்)
(கி. பி. 985 - 1014)



தமிழி எழுத்துக்கள்

(கி. மு. 3-கி. பி. 3ம் நூற்றாண்டு)



வட்டெழுத்துக்கள்

(கி. பி. 3 - 7ஆம் நூற்றாண்டு)



பல்வேறு மொழிகளில் எண்ணியல் வடிவங்கள்

இந்திய-அரேபிய எண்கள் (உலகளாவிய முறை)	0	½	1	2	3	4	5	6	7	8	9	10	50	100	500	1000
தமிழ் எண்கள்		இ	௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	௰	௫௰	௱	௫௱	௲
ரோமன் எண்கள்			I	II	III	IV	V	VI	VII	VIII	IX	X	L	C	D	M
அரபு-துருக்கி எண்கள்	٠	١/٢	١	٢	٣	٤	٥	٦	٧	٨	٩	١٠	٥٠	١٠٠	٥٠٠	١٠٠٠
மலாய்-ஜாவி எண்கள்	٠	١/٢	١	٢	٣	۴	٥	٦	٧	٨	٩	١٠	٥٠	١٠٠	٥٠٠	١٠٠٠
கிழக்கு-அரேபிய எண்கள்	۰	½	1	٢	٣	٤	۵	۶	V	٨	9	10	۵0	100	۵00	1000
ஹைதராபாத்-அரேபிய எண்கள்	0	½	١	٢	٣	۴	۵	۶	۷	۸	۹	10	۵0	100	۵00	1000
வடஇந்திய (சம்ஸ்க்ருத) எண்கள்	0	½	१	२	३	४	५	६	७	८	९	१०	५०	१००	५००	१०००
அஸ்ஸாம் எண்கள்	০	১/২	১	২	৩	৪	৫	৬	৭	৮	৯	১০	৫০	১০০	৫০০	১০০০
வங்காள எண்கள்	০	১/২	১	২	৩	৪	৫	৬	৭	৮	৯	১০	৫০	১০০	৫০০	১০০০
குஜராத்தி எண்கள்	૦	૧/૨	૧	૨	૩	૪	૫	૬	૭	૮	૯	૧૦	૫૦	૧૦૦	૫૦૦	૧૦૦૦
கட்ச் எண்கள்	0	1/२	1	२	३	४	५	६	७	८	९	10	५0	100	५00	1000
தேவநாகரி எண்கள்	०	१/२	१	२	३	४	५	६	७	८	९	१०	५०	१००	५००	१०००
நேபாள எண்கள்	0	१/२	१	२	३	४	५	६	७	८	९	१०	५०	१००	५००	१०००
திபெத் எண்கள்	༠	༡/༢	༡	༢	༣	༤	༥	༦	༧	༨	༩	༡༠	༥༠	༡༠༠	༥༠༠	༡༠༠༠
மங்கோலிய எண்கள்	᠐	᠐/᠒	᠐	᠒	᠓	᠔	᠕	᠖	᠗	᠘	᠙	᠑᠐	᠕᠐	᠑᠐᠐	᠕᠐᠐	᠑᠐᠐᠐
பர்மிய எண்கள்	၀	၁/၂	၁	၂	၃	၄	၅	၆	၇	၈	၉	၁၀	၅၀	၁၀၀	၅၀၀	၁၀၀၀
தாய்-கம்போடிய எண்கள்	0	១/២	១	២	៣	៤	៥	៦	៧	៨	៩	១០	៥០	១០០	៥០០	១០០០
ஜாவா எண்கள்	0		꧑	꧒	꧓	꧔	꧕	꧖	꧗	꧘	꧙	꧑0	꧕0	꧑00	꧕00	꧑000
சீன-ஜப்பான்-கொரிய எண்கள் (பொதுப் பயன்பாடு)	零	半	一	二	三	四	五	六	七	八	九	十	十五	百	百五	千
சீன எண்கள் (அலுவலகப் பயன்பாடு)			壹	貳	叁	肆	伍	陸	柒	捌	玖	拾	拾伍	佰	佰伍	仟
சீன எண்கள் (வணிகப் பயன்பாடு)			〡	〢	〣	〤	〥	〦	〧	〨	〩	十	〥十	〡百	〥百	〡千
கொரிய எண்கள்		반	일	이	삼	사	오	육	칠	팔	구	십	오십	백	오백	천
ஜார்ஜிய எண்கள்			ა	ბ	გ	დ	ე	ვ	ზ	ჱ	თ	ი	ნ	რ	ფ	ჩ
			ლ [1]	კ [20]	ლ [30]	მ [40]	ნ [50]	ჲ [60]	ო [70]	პ [80]	ჟ [90]	რ [100]	ს [200] ტ [300]	უ [400]	ქ [600] ღ [700]	ყ [800]
எத்தியோப்பிய எண்கள்	•		፩	፪	፫	፬	፭	፮	፯	፰	፱	፲	፶	፻	፭፻	፲፻
				፳ [20]	፴ [30]	፵ [40]		፷ [60]	፸ [70]	፹ [80]	፺ [90]					
ஹீப்ரு எண்கள்			א	ב	ג	ד	ה	ו	ז	ח	ט	י	נ	ק	תק	
				כ [20]	ל [30]	מ [40]		ס [60]	ע [70]	פ [80]	צ [90]		ר [200] ש [300]	ת [400]	תר [600] תש [700]	תת [800]
கிரேக்க எண்கள்			Α	Β	Γ	Δ	Ε	ΣΤ	Ζ	Η	Θ	Ι	Ν	Ρ	Φ	Α
				Κ [20]	Λ [30]	Μ [40]	Ξ [60]	Ο [70]	Π [80]		Σ [200]	Τ [300]	Υ [400]	Χ [600]	Ψ [700]	Ω [800]

பயிற்சிக்காக.............



நல்லதொரு மூன்றினங்கள்
நாவார்ச் சொல்லுதல் ஓ
மென்ற மந்திரமே ஓம் நம
சிவாயமெனும் ஓமென்றம
ந்திரமே யாரணங்கே தா
மே வரசுபதின் மே
ன் வாக்கினிலே வாமுஞ்
சரசுபதி யே சரணம் குமர
ன்துணை. திருச்சிற்றம்பலத்து



பார்

வதிய

கவ

ல்

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே

செய்யினையே காராரு மேனிக்க

னங்குளலே ஆராயும் வேதமுதல

ாகி நின்ற மெய்ப்பொருளே மின்

னொளியே ஆதி பராபரையே அம்

பிகையே சோதியே அண்டரெ

ல்லாம் போற்று மரும் எ

பாருளே ஆரணங்கே

எண்டிசைக்குந் தாயான யீசு

பரியே தெண்டிரையில் வந்

தமுதே யென்று மறவாம் வே

யிருப்பார் சிந்தைத் தனிலேயுரை



ஹரி ஓம்

(கிரந்த எழுத்தில் உள்ளது)

சரசுப

திஅகவ

ல்

ய (10)

அரிமூல அட்சரமே யன்ப

த்தொன்றான சரசுபதி

யே நமோ தாயே திரிபுரை

யே வாக்கினிலே வந்துதவு

ம்வாது சிவமோகினி யே

நாக்கினிலே வந்திரு

க்கும் நாமகளே

நோக்கியே பதினெண் பு

ராணங்கள் பாடுதற்கு நாவிற்

மதுரம் பொழியவரும் வ

ராமீ கதியான தோராத

சீர் பிரித்து எழுதுதல்



.......................மந் திரத்தால்
ஐம்புலக் கதவால் அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையை
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்து
இடைபிங் கலையின் எழுத்தறி வைத்துக்
கடையின் சுழிமுனைக் கமலங் குறித்து
மூன்றுமண் டலம் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட சொல்லி
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கணக்கறி வைத்து
அமுத நிலையும் ஆதித்த வாரமும்
குமுத சகாயக் குணத்தையுங் காட்டி
இடைச்சக் கரத்தின் எட்டு நிலையும்
உடற்.......................................

முகத்தலளவை

முகத்தலளவைக் கருவிகளாகிய மரக்கால், படி, அரைப்படி, கால் படி, ஆழாக்கு பற்றி பார்ப்போம்.



8 ஆழாக்கு	=	*1 படி*
8 படி	=	*1 மரக்கால்*
12 மரக்கால்	=	*1 கலம்*
5 மரக்கால்	=	*1 பரை*
80 பரை	=	*1 கரிசை*

திருநெல்வேலி அளவு

1 மரக்கால்	=	*1 குறுணி*
2 மரக்கால்	=	*1 பதக்கு*
3 மரக்கால்	=	*முக்குறுணி*
21 மரக்கால்	=	*1 கோட்டை*

தஞ்சை அளவு

4 மாகாணி	=	*1 படி*
4 படி	=	*1 மரக்கால்*
12 மரக்கால்	=	*1 கலம்*
2 கலம்	=	*1 மூட்டை*
1½ கலம்	=	*1 கோட்டை*

நிறுத்தலளவை

நிறுத்தலளவைகளான தோலா, பலம், சேர், வீசை, மணங்கு, பாரம், தூக்கு இவைகளைக் காண்போம்.

1 ரூ. எடை	=	*1 தோலா*
3 தோலா	=	*1 பலம்*
8 பலம்	=	*1 சேர்*
5 சேர், 40 பலம்	=	*1 வீசை*
8 வீசை	=	*1 மணங்கு*
20 மணங்கு	=	*1 பாரம்*

1 தூக்கு = 50 பலம் = 6¼ சேர்

கால அளவை

கால அளவு இருவகைப்படும். ஆங்கிலக் கால அளவு இந்தியக் கால அளவு, இவ்விரு கால அளவைகளுக்கும் மூல அளவுகள், நாள், வருடம் எனப்படும். சாதாரணமாய் ஒருநாள் அல்லது தினம் என்பது சூரிய உதய முதல் மறு சூரிய உதயம் வரையிலுள்ள காலத்தைக் குறிக்கிறது.

ஆங்கிலக் கால அளவையில் ஒரு நாளை 24 பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் 1 மணி என்றும், 1 மணியை 60 பாகங்கள் செய்து, ஒவ்வொரு பாகத்திற்கும் 1 நிமிடமென்றும், 1 நிமிடத்தை 60 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் 1 செகண்ட் என்றும் பெயரிட்டிருக்கின்றனர்.

60 செகண்டு	=	*1 நிமிடம்*
60 நிமிடம்	=	*1 மணி*
24 மணி	=	*1 நாள்*

இந்தியக் கால அளவில் 1 நாளை 60 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கு 1 நாழிகை என்றும், 1நாழிகையை 60 பாகங்கள் செய்து ஒவ்வொரு பாகத்திற்கு 1விநாடியென்றும் பெயரிட்டிருக்கின்றனர்.

60 விநாடி	=	*1 நாழிகை*
3 ¾ நாழிகை	=	*1 முகூர்த்தம்*
2 முகூர்த்தம் *7 ½ நாழிகை*	=	*1 ஜாமம்*
8 ஜாமம் *60 நாழிகை*	=	*1 நாள்.*

இரண்டு கால அளவுகளும்

1நாள் = 24 மணி	=	*60 நாழிகை*
1 மணி	=	*2 ½ நாழிகை*
24 நிமிடம்	=	*1 நாழிகை*

ஒரு நாளை சிறு பொழுதாகவும், ஆண்டினை பெரும் பொழுதாகவும் வகுத்தனர் தமிழர்கள்.

வைகறை	=	*அதிகாலை 2 முதல் 6 மணி வரை*
விடியல்	=	*6 முதல் 10 மணி வரை*
நண்பகல்	=	*10 முதல் 2 மணி வரை*
ஏற்பாடு	=	*2 முதல் 6 மணி வரை*
மாலை	=	*6 முதல் 10 மணி வரை*
கார்	=	*ஆவணி - புரட்டாசி*
கூதிர்	=	*ஐப்பசி - கார்த்திகை*
முன்பனி	=	*மார்கழி - தை*
பின் பனி	=	*மாசி - பங்குனி*
இளவேனில்	=	*சித்திரை - வைகாசி*
முதுவேனில்	=	*ஆனி - ஆடி*
4 ஜாமம்	=	*1 பொழுது*
2 பொழுது	=	*1 நாள்*
15 நாள்	=	*1 பக்கம்*
2 பக்கம்	=	*1 மாதம்*
6 மாதம்	=	*1 அயனம்*
2 அயனம்	=	*1 ஆண்டு*
60 ஆண்டு	=	*1 வட்டம்.*

நீட்டலளவை

காகிதங்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்ட பின்னர் ஓலைச்சுவடிகளின் பயன்பாடு வெகுவாகக் குறைய ஆரம்பித்தது. பல்வேறு செய்திகளும், காகித ஆவணங்களில் எழுதி வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இத்தகு ஆவணங்களில் பயன்பட்ட பழைய அளவு முறைகள் இன்று பெரும்பாலும் வழக்கொழிந்து போய்விட்டன.

நீட்டலளவைகளான வயல், சாலை இவற்றை அளக்க பயன்பட்ட அளவீடுகள் அடி, கெஜம், கண்ணி, சங்கிலி போன்றவைகளாகும்.

12 அங்குலம்	=	*1 அடி*
3 அடி	=	*1 கெஜம்*
22 கெஜம்	=	*1 சங்கிலி (செயின்)*
	=	*100 கண்ணி (லிங்க்)*
10 சங்கிலி (220 கெஜம்)	=	*1 பர்லாங்*
8 பர்லாங்	=	*1 மைல்*

ஆவணங்களில் இவ்வளவீடுகளே பயன்பாட்டில் இருந்து வந்தது.

இந்திய நாணயம்

12 பைசா	=	*1 அணா*
16 அணா	=	*1 ரூபாய்*

மாதிரிக் கணக்கு-ஒரு பையில் ரூ. *72-10-9* பைசா இருந்தது அதில் ரூ. *24-12-10* பைசா செலவழிந்த பின் மீதி எவ்வளவு இருக்கும் ?

	ரூ.	அ.	பை.
பையில் இருந்த தொகை	72	10	9
செலவழித்த தொகை	24	12	10
பையில் மிகுந்துள்ள தொகை	47	13	11

9 பைசாவிலிருந்து 10 பைசாவைக் கழிக்க முடியாது. ஆகையால் 10 அணாவிலிருந்து 1 அணா எடுத்து அதைப் பைசாவாக மாற்ற 12 பைசாவாகும். அதோடு 9 பைசாவைச் சேர்க்க 21 பைசாவாகும். 21 பைசாவில் 10 பைசாவைக் கழிக்க 11 பைசா மீதி வரும். அதை விடையில் பைசாக் கலத்தில் எழுதுக.

இப்பொழுது கழிக்கப்படும் தொகையில் 9 அணா மீதி இருக்கும். அதிலிருந்து 12 அணாவைக் கழிக்க முடியாது. ஆகையால் ரூபாயிலிருந்து 1 ரூபாய் எடுத்து அதை அணாவாக மாற்ற 16 அணா ஆகும். அதோடு 9 அணாவையும் சேர்க்க 25 அணா ஆகும். அதிலிருந்து 12 அணாவைக் கழிக்க மீதி 13 அணா வரும். ஆகையால் விடையில் அணாக் கலத்தில் 13 போட வேண்டும்.

கழிக்கப்படும் தொகையில் இப்பொழுது 71 ரூபாய் இருக்கிறது. அதிலிருந்து 24 ரூபாயைக் கழிக்க 47 ரூபாய் மீதியாகும். ஆகையால் விடையில் ரூபாய்க் கலத்தில் 47 போடவேண்டும். எனவே விடை ரூ. 47-அணா 13-பைசா-11 ஆகும்.

அளவுக் குறியீடுகள்

½ படி		தூணி	
1 படி		இரு தூணி	
5 படி		கலம்	
குறுணி		ஒருகலம்	
பதக்கு		காணி	
முக்குறு			

சொற் குறியீடுகள்

குறி		வாரம்	
மகசூல்		மானியம்	
நெல்		முதலியார்	
தானியம்		பூச்சியம்	
வராகன்		முதல்	
ஆகு			

மயமதம், சிற்பரத்தினம், காசியசில்பம் போன்ற சிற்ப நூல்களில் காணப்படும் அளவுகள்.

24 விரல் கொண்ட முழம்	கிஷ்கு
25 விரல் கொண்ட முழம்	பிரஜாபத்தியம்
26 விரல் கொண்ட முழம்	தனுர்முஷ்டி
27 விரல் கொண்ட முழம்	தனுர்கிரஹம்
28 விரல் கொண்ட முழம்	பிராச்யம்
29 விரல் கொண்ட முழம்	வைதேகம்
30 விரல் கொண்ட முழம்	வைபுல்யம்
31 விரல் கொண்ட முழம்	பிரகீர்ணம்

என்ற அளவீடுகளே முன்னர் கோயில் கட்டுமானங்களுக்கும், சிற்பங்கள் படைப்பதற்கும் வழக்கில் இருந்தன. இவ்வகை முழங்களுக்கு அடிப்படையாக விளங்கும் விரல் என்பது கோயிலை எடுக்கும் சிற்பியின் கைவிரலின் அகலத்தை கொண்டு விளங்குவதாகும்.

1 விரல் என்பது தற்காலத்திய *2* செ. மீட்டர் ஆகும்.